Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 8, 2021

புதன்கிழமை டிசெம்பர் 08, 2021 | ஒளி: 07 கதிர்: 173 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

முழந்தாளிடப்போவதில்லை என்றால் பசில் சென்றது

# இந்தியாவை வணங்கவா?

**சபையில் ரணில் கேள்வி: எச்சரிக்கையும் விடுத்தார்**

**கையிருப்பில் உள்ள அந்நிய செலாவணி விவரங்களை பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும்**

**பட்ஜெட்டின் போது நிதி அமைச்சர் சபையில் இருக்க வேண்டும். ஆனால், அவர் இந்தியா சென்றுள்ளார்**

**வரவு –செலவு திட்டம் சரியாக இருந்தால், நிதியமைச்சர் ஏன் இந்தியாவுக்கு செல்ல வேண்டும்?**


■ பா.நிரோஸ்

கடனுக்காக எவருக்கு முன்பாகவும் முழந்தாளிடப் போவதில்லை என அரசாங்கம் கூறுகிறது. அப்படியானால் எதற்காக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு சென்றார் என கேள்வியெழுப்பிய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி, இந்திய அரசாங்கத்தை வணங்கவா எனவும் வினவினார்.

ஒட்டுமொத்த 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் நாட்டு மக்கள் திட்டித்தீர்க்கிறார்கள். நாட்டு மக்களின் நம்பிக்கையை பாராளுமன்றம் இழந்தால், நாடு கட்டியெழுப்பவே முடியாத நிலைக்குச் செல்லும் எனவும் எச்சரித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துகொண்டு சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்த ரணில் விக்கிரமசிங்க, தனியாளாக ஆளுங்கட்சியினருடன் காரசாரமான நீண்ட விவாதத்திலும் ஈடுபட்டிருந்தார்.

தொடர்ச்சி P2



எரிவாயு சிலிண்டர் வாங்குவது

# வெடிகுண்டு வாங்குவது போல ஆகிவிட்டது

**சீ.ஐ.டியில் எதிர்க்கட்சி முறைப்பாடு**

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பான அண்மைய சம்பவங்களுக்கு காரணமான அனைத்து நபர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி, குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் (சீ.ஐ.டி) நேற்று (07) முறைப்பாடு செய்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்களான ஜே. சி. அலவத்துவல, முஜிபூர் ரகுமான், ஹர்ஷன ராஜகருணா, ஹெக்டர் அப்புஹாமி, சுஜித் சஞ்சய பெரேரா உட்பட பலர் சீ.ஐ.டிக்கு விஜயம் செய்திருந்தனர்.

நமது நாட்டில் 40 சதவீதம் மக்கள் எரிவாயுவை பயன்படுத்துகின்றனர். இன்று எரிவாயு சிலிண்டர் வாங்குவது என்பது, வெடிகுண்டு வாங்குவது போல் ஆகிவிட்டது. இதனால் அந்த மக்கள் அனைவரும் இன்று பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று, முறைப்பாடு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சி. அலவத்துவல தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "சமீபகாலமாக நாட்டில் பாரிய எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டது. பின்னர் அரசாங்கம் எரிவாயு விலையை மக்கள் தாங்க முடியாத அளவுக்கு உயர்த்தியது.

தொடர்ச்சி P2

# பண்டிகைக்கு முன் பூஸ்டரை பெறுங்கள்

60 வயதுக்கு மேற்பட்டவர்கள், பண்டிகைக் காலத்துக்கு முன்னதாக ஃபைசர் பூஸ்டர் தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுமாறு கல்லூரிகளுக்கிடையேயான குழுவுடன் இணைந்து இலங்கை மருத்துவ சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை மருத்துவ சங்கத்தால் நேற்று (07) வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# தமிழர்களுக்கு சஜித் அநீதி

**கூட்டமைப்பும் ஆளுந்தரப்பும் குற்றச்சாட்டு**

■ பா.நிரோஸ்

வரவு -செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களின் பெயர் பட்டியலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சபையில் தெரிவித்தது. மேலும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இவ்வாறு புறக்கணிக்கப்பட்டு உள்ளமையானது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதியெனவும் தமிழ் மக்களுக்கு இதனூடாக எதிர்க்கட்சி தலைவர் சஜித், அநீதி இழைத்துள்ளதாகவும் ஆளுந்தரப்பினரும் குற்றஞ்சுமத்தினர். பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துகொண்டிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்,

தொடர்ச்சி P2

**இன ரீதியான கல்வி அலுவலகங்களால்**

# கிழக்கில் ஐக்கியம் சீர்குலைவு

**கிழக்கு கல்வி நிருவாக அதிகாரிகள் சங்கம் கவலை**



■ அஸ்லம் எஸ்.மௌலானா

தேசிய கல்வி நிர்வாகக் கொள்கைக்கு முரணாக, கிழக்கு மாகாணத்தில் இன ரீதியாக வலயக் கல்வி அலுவலகங்களும் கோட்டக் கல்வி அலுவலகங்களும் உருவாக்கப்பட்டுள்ளமை இன ஐக்கியத்தை சீர்குலைக்கும் செயற்பாடாகுமென இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இன்றைய தொழிற்சங்க

# போராட்டத்துக்கு பலத்த ஆதரவு



■ எம்.எஸ்.எம். ஹனீபா, செ.கீதாஞ்சன்

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கக் கோரியும் பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து, அகில இலங்கை தொழில் சங்கங்களின் சம்மேளத்தால் ஒரு நாள் சுகவீன விடுமுறை மற்றும் வேலைநிறுத்தப் போராட்டம், இன்று (08) இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு முன்னாலும் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னாலும் அனைத்துத் திணைக்களங்களின் தொழிற்சங்கங்கள் இப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பல்வேறு தரப்பிலிருந்து பலத்த ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு, வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கமும் ஆதரவை வழங்கியுள்ளதாக, அந்தச் சங்கத்தின் தலைவர் க.விக்னேஸ்வரானந்தன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

பட்ஜெட் மீண்டும் தோல்வி:

# சபையை இழக்குமா கூட்டமைப்பு?

■ க. அகரன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வசமுள்ள வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 9 மேலதிக வாக்குளால் இரண்டாவது தடவையாகவும், நேற்று (07) தோற்கடிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

T N A

Tamil National Alliance

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

பாதையை விட்டு விலகிய பஸ்

# ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் 26 பேர் காயம்

**சாரதிக்கு கொரோனா**

■ தீஷான் அஹமட், ஹஸ்பர் ஏ ஹலீம், ஏ.எம்.கீத்

ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்று, திருகோணமலை - பாலமோட்டாறு பகுதியில் வைத்து பாதையை விட்டு விலகி, வீதியின் ஓரத்திலிருந்த கொங்றீட் கம்பத்துடன் மோதி நேற்று (07) காலை விபத்துக்குள்ளானது.



கோமரங்கடவெல பகுதியில் இருந்து கப்பல் துறை பகுதியில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸே முன்னால் சென்ற மற்றுமொரு பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட வேளை இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

தொடர்ச்சி P2

லிட்ரோ சிலிண்டர் களஞ்சியசாலையை

# இடமாற்றக் கோரி போராட்டம்

■ எம். றொசாந்த், எஸ். நிதர்ஷன்



நாடு முழுவதும், காஸ் வெடிப்பு சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பதிவாகி வரும் நிலையில், தமது உயிருக்கு பாதுகாப்பு தேடும் வகையில், லிட்ரோ விநியோகஸ்தர் எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலையை, வேறு இடத்துக்கு மாற்றுமாறு வலியுறுத்தி, யாழ்ப்பாணத்தில், நேற்று (07) காலை, கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

எறிகணை வெடித்த வீட்டில் இருந்து

# பெருந்தொகையான எறிகணைகள், வெடிபொருள்கள் மீட்பு



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, உமையாள்புரம், சோலை நகர் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து, பெருந்தொகையான எறிகணைகள், வெடிபொருட்கள் என்பன விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார், நேற்று (07) காலை மீட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# இன்றும் மாலையில் மின் தடை

மின்சார விநியோகத்தில் இன்றும் (08) இடையூறுகள் ஏற்படக்கூடும் என, மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

மாலை 6.00 மணிக்கும் 9.30 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஒரு மணி நேர மின்வெட்டு அமல்படுத்தப்படும் என்றும் மின் தடைப்படும் பகுதிகள் தொடர்பில் இன்னும் முடிவு எடுக்கப்படாததால், தேவைக்கேற்ப மின் விநியோகம் தடைப்படும் என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

இன்னும் சிலநாள்களுக்கு

# காஸ் கவனம்



இன்னும் சில தினங்களுக்கு சமையல் எரிவாயுவைப் பயன்படுத்தும் போது, முன்னரை விடவும் கூடுதலான கவனத்தை செலுத்துமாறு, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (07) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வடக்கில் சீனா நிராகரித்த மூன்று தீவுகளை

# இந்தியாவுக்கு வழங்க தீர்மானிக்கவில்லை

**ரமேஷ் பத்திரண தெரிவிப்பு: கதிரைகள் குறித்தும் விளக்கம்**

வடக்கிலுள்ள மூன்று தீவுகளில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு சீனா ஏற்கெனவே தீர்மானித்திருந்தது. எனினும், உரப்பிரச்சினை காரணமாக அத்திட்டத்தை கைவிடுவதாக சீனா அறிவித்துவிட்டது. இந்நிலையில், அந்த மூன்று தீவுகளிலும் மின்சார உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்காக இந்தியாவுக்கு வழங்கவிருப்பதாக கூறப்படுகிறது. இது உண்மையா என, ஊடகவியாலாளர் கேள்வியெழுப்பினார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய தீவுகளில் கலப்பு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பு உருவாக்கும் திட்டத்தை நிறுத்திவிட்டதாக டிசெம்பர் 2ஆம் திகதியன்று சீனா அறிவித்திருந்தது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (07) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சரவை இணைப்பேச்சாளரான பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, "நீங்கள் கூறியதைப்போல, (இந்தியாவுக்கு வழங்குதல்) எந்தவிதமான கலந்துரையாடல்களோ, தீர்மானங்களோ எட்டப்படவில்லை" என்றார்.

இதேவேளை, சீனாவுடனான



உரப்பிரச்சினை என்பது, இரண்டு நிறுவனங்களுக்கு இடைப்பட்டதாகும். இது விற்பனை சார்ந்த முரண்பாடாகும்.

தொடர்ச்சி P2

பிரியந்த படுகொலை

# பில்லி கைது

பிரியந்த குமாரவை கொடூரமான முறையில் படுகொலை செய்து அவரது உடலை எரியூட்டிய வழக்கில் மிகவும் தேடப்படும் குற்றவாளியான 'பில்லி' என்றழைக்கப்படும் இம்தியாஸ் என்பவரைக் கைது செய்துள்ளதாக பாகிஸ்தானின் பஞ்சாப் பொலிஸார் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## வெடிகுண்டு வாங்குவது போல ஆகிவிட்டது

எரிவாயுத் தட்டுப்பாட்டுக்கு நிவாரணம் வழங்கி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பதிலாக கலவை தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

எரிவாயு சிலிண்டர் விரைவில் தீர்ந்துவிடுவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்ற அதேவேளை, நாடு முழுவதும் கேஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறுகின்றன.

தரமற்ற எரிவாயு சிலிண்டர்கள் நிரப்பப்பட்டு அவற்றின் கலவை மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த சர்ச்சையை ஏற்படுத்திய லிட்ரோ நிறுவனம் நிதி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அரச நிறுவனம் தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சுமார் 472 எரிவாயு சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாளாந்தம் சுமார் பத்து எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக இந்த எரிவாயு நிறுவனத்தின் தலைவரிடமோ, இயக்குநர் குழுவிடமோ இதுவரை ஆலோசனை நடத்தப்படவில்லை.

எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பான வெடிப்புகள் மற்றும் அவற்றின் கலவை தொடர்பான நிலைமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் எமது எம். பிக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

தரமற்ற எரிவாயு சிலிண்டர்களை சந்தையில் இருந்து அகற்ற வேண்டும் என கோரிக்கை விடுக்கிறோம். சீ.. டி மற்றும் பொலிஸ்மா அதிபரிடம் முறையான விசாரணை நடத்தி குற்றவியல் சட்டத்தின்படி தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்றார்.

## ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் 26 பேர் காயம்

இதில் பஸ் சாரதி உட்பட ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 26 படுகாயமடைந்து, திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 26 பேருக்கும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் பஸ் சாரதிக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, அவர் வைத்தியசாலையின் கொரோனா பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்துத் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இந்தியாவை வணங்கவா

நாட்டின் கையிருப்பில் உள்ள அந்நிய செலாவணி தொடர்பான விவரங்களை பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என வலியுறுத்திய ரணில், நாட்டின் அந்நிய செலாவணி தொடர்பில் இந்திய அரசாங்கத்துக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் தகவல்களை வழங்க முடியுமாக இருந்தால் பாராளுமன்றத்துக்கு ஏன் வழங்க முடியாது எனவும் தொடர்ந்து கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, வரவு- செலவு திட்டம் மீதான விவாதத்தின் இறுதியில் நிதி அமைச்சர் முழு பொருளாதாரம் தொடர்பில் விளக்கமளிப்பார். முன்னாள் பிரதமரின் கேள்விகளுக்கும் நிதி அமைச்சர் இதன்போது பதில் வழங்குவார் எனவும் தெரிவித்தார்.

நான், எதிர்க்கட்சியில் இல்லை. குறைந்தது பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் குழுவில் கூட இல்லை என பதில் வழங்கிய ரணில் விக்கிரமசிங்க, வரவ- செலவு திட்டம் விவாதங்கள் நடைபெறும்போது நிதி அமைச்சர் சபையில் இருக்க வேண்டும். ஆனால், வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பித்துவிட்டு பெசில் ராஜபக்ஷ, இந்தியா சென்றிருந்தார். இதற்கு முன்னர் எந்தவொரு நிதி அமைச்சரும் இதுபோன்று செயற்பட்டதில்லை என்றார்.

மேலும் பெசில் ராஜபக்ஷ, ஏன் இந்தியாவுக்கு செல்ல வேண்டுமென தொடர்ந்து வினவிய ரணில், புத்தகாயாவை வணங்கவா இல்லை இந்திய அரசாங்கத்தை வணங்கவா எனவும் கேட்டார்.

ஆளும், எதிர்க்கட்சியென இரு தரப்பையும் மக்கள் திட்டித் தீர்க்கிறார்கள். 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் மக்கள் திட்டுகிறார்கள். 40 வயதுக்குட்பட்டவர்கள் நம்மை புறக்கணிக்கிறார்கள். 30 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் நம்மை யாரென்றுகூட பார்ப்பதில்லை என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த அமைச்சர் தினேஸ் குணவர்தன, நிதி அமைச்சர் தொடர்ந்து பாராளுமன்றத்துக்கு வருகிறார். நேற்றும் அவர் பாராளுமன்றத்துக்கு வந்திருந்தார். இதேவேளை, விசேட கூட்டங்கள் நடைபெறும்போது அவரது அறையில் இருந்தவாரே விவாதங்களை பெசில் பார்ப்பார் எனவும் கூறினார்.

இதற்குப் பதிலளித்த ரணில், வரவு- செலவு திட்டம் விவாதம் நடைபெறும்போது எந்தவொரு நிதி அமைச்சரும் வெளிநாடுகளுக்குப் பயணங்களை மேற்கொண்டதில்லை. ஆனால் பெசில் இந்தியாவுக்கு சென்று வந்துள்ளார். வரவு -செலவு திட்டம் சரியாக இருந்தால் ஏன் இந்தியாவுக்கு செல்ல வேண்டும் இந்தியாவுக்கு செல்வதற்கான காரணம் என்ன என தொடர்ந்து கேள்வி எழுப்பிகொண்டே இருந்தார்.



## கிழக்கில் ஐக்கியம்...

இது தொடர்பாக அவர் நேற்று (07) ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்; "நாட்டில் பிரதேச செயலகம் ஒன்றுக்கு ஒரு கோட்டக் கல்வி அலுவலகம் என்பது கல்வி அமைச்சின் தேசிய கல்வி நிர்வாக கொள்கையாகும். இதை மீறி, நாட்டில் வேறு மாகாணங்களில் கோட்டக் கல்வி அலுவலகம் ஆரம்பிக்கப்படவில்லை.

"ஆனால், கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் தேசியக் கல்வி நிர்வாகக் கொள்கைக்கு முரணான வகையில், தமிழ் மற்றும் முஸ்லிம் பிரிவு என்ற ரீதியில் கோட்டக் கல்வி அலுவலகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

"குறிப்பாக, கிண்ணியா கல்வி வலயத்தில் குறிஞ்சாக்கேணி, முள்ளிப்பொத்தானை கோட்டக் கல்வி அலுவலகங்களும் திருகோணமலை கல்வி வலயத்தில் புல்மோட்டை கோட்டமும் மூதூர் வலயத்தில் தோப்பூர் கோட்டமும் திருக்கோவில் வலயத்தில் பொத்துவில் தமிழ் பிரிவு கோட்டமும் தனிக் கோட்டங்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

"இக்கல்விக் கோட்டங்கள் என்ன அடிப்படையில் எவரது அனுமதியின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது என்பது பற்றி கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும்.

"அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் தமிழ் கல்வி வலயம், முஸ்லிம் கல்வி வலயம் என்ற ரீதியில் இனங்களுக்கென தனித்தனியாக மட்டக்களப்பு மத்தி, திருக்கோவில், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

"கல்வியூடான சமாதானம், சகவாழ்வு, இன சௌஜன்யம் என்பன இவ்வாறான கல்வி வலயங்கள் மற்றும் கோட்டங்கள் மூலம் பாதிக்கப்படுகின்றன" என்றார்.

## பில்லி கைது

பொலிஸாரின் சோதனையில் இருந்து தொடர்ந்து தப்பியோடிய அவர், இறுதியாக ராவல்பிண்டி செல்லும் பஸ்ஸில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. இவரது கைதுடன், இலங்கை முகாமையாளர் கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர்களின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளதுடன், தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் மொத்த எண்ணிக்கை 132 ஆக அதிகரித்துள்ளது. பஞ்சாப் முதலமைச்சர் உஸ்மான் பஸ்தார் மற்றும் பஞ்சாப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் வழக்கு விசாரணையை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர் என்றும் இந்த வழக்கை விசாரிக்கும் பொறுப்பை அரச தரப்பு செயலாளரிடம் முதலமைச்சர் ஒப்படைத்துள்ளார் என்றும் பொலிஸாரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலைத் தூண்டியவர்களில் ஒருவரான அட்னான் இப்திகாரையும் பொலிஸார், ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர். வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பல சட்டப் பிரிவுகளின் கீழ் அடையாளம் தெரியாத 900 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பண்டிகைக்கு முன் பூஸ்டரை பெற்றுங்கள்

நாட்டின் மூத்த குடிமக்கள் முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தடுப்பூசியின் முதல் 2 டோஸ்களை பூர்த்தி செய்யாதோரும் உடனடியாக தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

மேலதிகமாக, முன்னணி பணியாளர்கள் பூஸ்டர் டோஸுடன் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் மருத்துவ சங்கம் பரிந்துரைத்துள்ளது.

எதிர்வரும் பண்டிகை மற்றும் புத்தாண்டுக் காலங்களில் கூடும் கூட்டங்களில் அதிக தொற்று ஏற்படும் அபாயம் மற்றும் கொரோனாவின் ஒமிக்ரான் மாறுபாட்டின் சாத்தியமான பரவல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே மருந்துவ சங்கம் இவற்றைப் பரிந்துரைப்பதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## காஸ் கவனம்

"தற்போது பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு மற்றும் விற்பனை பிரதிநிதிகளிடம் இருக்கும் சமையல் எரிவாயு தொடர்பில் இன்னும் சில தினங்களில் தீர்மானம் எடுக்கப்படும்" என்றார்.

" முதலாவது நடவடிக்கைதான், பிரச்சினையான எரிவாயு (காஸ்) நாட்டுக்குள் விற்பனைச் செய்யப்படுதல் நிறுத்தியமை. அதேபோல, உற்பத்தி நிலையங்களில் தரமின்றிய காஸ் நிரப்பப்பட்ட சிலிண்டர்கள், சந்தைக்கு விநியோகித்தலை நிறுத்தியமை" இவ்விரு செயற்பாடுகளையும் முறையாக முன்னெடுத்தோம்.

விற்பனை பிரதிநிதிகளிடம் இருக்கும் காஸ் சிலிண்டர்கள் மற்றும் வீடுகளில் இருக்கும் காஸ் சிலிண்டர்கள் தொடர்பில், இன்னும் சில நாட்களில் உரிய நடவடிக்கைகளை எடுப்போம். எனினும், முன்பை விடவும் மிகவும் விழிப்பாகவும் கவனமாகவும் இருக்குமாறு நுகர்வோரிடம் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு இருந்தால், இன்னும் சில நாட்களுக்குள் காஸ் சிலிண்டரை பயன்படுத்தலாம் என்றார்.

காஸ் சிலிண்டர் கசிவு மற்றும் காஸ் அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள், இந்தப் பிரச்சினைக்கு முன்பிருந்தே இருந்துள்ளன, வெடிப்புச் சம்பவங்களை பட்டியலிட்ட அவர், பொலன்னறுவை பகுதியில் காஸ் அடுப்பு வெடித்தமையால் பெண்ணொருவர் மரணமடைந்துவிட்டார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

## தமிழர்களுக்கு சஜித் அநீதி

வரவு செலவுத் திட்டத்தில் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் எதிர்க்கட்சிகளின் எம். பி.க்களின் பெயர் பட்டியலை சபாநாயகருக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் கையளித்துள்ளார்.

இந்த பட்டியலில் 33 எம்.பிக்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கூட்டமைப்பின் எம்.பிகள் பெயர்கள் இதில் உள்வாங்கப்படவில்லை. கூட்டமைப்புக்கு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்கள் இல்லை. எனவே எமது மக்கள் சார்ந்தப் பிரச்சினைகளை பாராளுமன்றத்திலேயே பேச வேண்டும் எனவும் கூறினார்.

## இடமாற்றக் கோரி போராட்டம்

யாழ்ப்பாணம் - கொட்டடி பகுதியில் அமைந்துள்ள லிட்ரோ கேஸ் விநியோகஸ்தர் எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலைக்கு முன்பாக, நேற்றைய தினம் காலை 9 மணியளவில், அப்பிரதேச மக்கள் ஒன்றுகூடி, இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, போராட்டக்காரர்கள், "எமது உயிருக்கு யார் உத்தரவாதம்?", "தற்போதைய தரமற்ற எரிவாயு விநியோகத்துக்கு யார் பொறுப்பு?", "ஏழைகளின் உயிரா, பண பலமா?", "எங்கள் பிள்ளைகளின் உயிருடன் விளையாடாதே", "ஆராக்கியமான சந்ததியாக நாம் வாழ வழி விடு" போன்ற பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

அப்பகுதியை சேர்ந்த ஜே / 81 பிரிவை சேர்ந்த மக்கள், ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையம் ஊடாக குறித்த களஞ்சியசாலை மூலம் சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டு உள்ளதாகவும் களஞ்சியசாலைக்கு முன்பாக கனரக வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவதனால், போக்குவரத்து இடையூறு ஏற்படுவதாகவும் குறிப்பாக, அருகில் உள்ள பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டு, உடனடியாக அங்கிருந்து குறித்த களஞ்சியசாலையை அகற்றுமாறு, யாழ்ப்பாண பிரதேச செயலாளர் , யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் , நகர அபிவிருத்தி அதிகார சபை பிரதிப் பணிப்பாளர் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை பிரதிப்பணிப்பாளர் உள்ளிட்டோருக்கு இந்த ஆண்டு ஆரம்பத்தில் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்து இருந்தனர்.

அதேவேளை, அப்பகுதி மக்களின் முறைப்பாட்டை அடுத்து, நகர அபிவிருத்தி அதிகார சபை , எரிவாயு களஞ்சியத்தின் பாதுகாப்பு ஒழுங்குகள் அயலவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ள வேண்டும், ஆதனத்துக்குள் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், கட்டடத்துக்கான அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்பட்டிருந்தால், அதனை சமர்ப்பிக்க வேண்டும் என,குறித்த களஞ்சியசாலை உரிமையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் , குறித்த களஞ்சிய சாலை உரிமையாளர், கடந்த ஒகஸ்ட் மாதமளவில், அயல் மக்களுக்கு இடையூறு செய்வதை கருத்தில் கொண்டு, மனிதாபிமான ரீதியிலும் இங்கு நடைபெறுகின்ற 50 வீதமான வாகன செயற்பாடுகளை வேறு இடத்துக்கு மாற்ற தீர்மானித்து உள்ளதாகவும், கொவிட்- 19 நிலைமை காரணமாக 4 - 6 மாத கால அவகாசம் தேவைப்படும் எனவும்,யாழ்ப்பாணம் மாநகர மேயருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். இந்த நிலையிலேயே, அப்பகுதி மக்கள், நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## சபையை இழக்குமா கூட்டமைப்பு?

வவுனியா வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, தவிசாளர் ச.தணிகாசலம் தலைமையில், நேற்று நடைபெற்றது.

கடந்த மாதம் இடம்பெற்ற அமர்வில், சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட நிலையில், அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டு இந்தது.

இந்நிலையில், நேற்றைய தினம், அது மீளவும் முன்வைக்கப்பட்டது. இதன்போது, மக்கள் சார்பான வேலைத்திட்டத்துக்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை என பல்வேறு உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிக்க வேண்டும் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.சஞ்சுதன் தெரிவித்தார். அவரது கருத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் முகுந்தன் வழிமொழிந்தார்.

அனேக உறுப்பினர்களின் எதிர்ப்பால், வரவு-செலவுத் திட்டம், வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

அந்தவகையில் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக தமிழர் விடுதலை கூட்டணி, பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி,சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி, சுயேட்சை குழு ஆகியவற்றை சேர்ந்த 17 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

ஆதரவாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த 8 உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு உறுப்பினரும் வாக்களித்திருந்தனர். இதனால், 9 மேலதிக வாக்குகளால் 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம், இரண்டாவது முறையாகவும் தோல்வியடைந்தது.

இந்நிலையில், உள்ளூராட்சி சட்டங்களின் படி, பிரதேச சபைக்கு புதிய தவிசாளரை தெரிவுசெய்வதற்கான தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் போது, வரவு-செலவுத் திட்டத்துக்கான வாக்கெடுப்பு இடம்பெற இருந்த போது, ஊடகவியலாளர்கள் குறித்த அமர்வு தொடர்பில் செய்தி சேகரிப்பதற்காக, தவிசாளரிடம் தொலைபேசி ஊடாக அனுமதி பெற்றிருந்தனர். எனினும், சபையில் தொலைபேசி பாவனை தொடர்பான குழப்பம் ஏற்பட்டபோது, பெதுஜன பெரமுன உறுப்பினரொருவர், ஊடகங்கள், வீடியோ பதிவு செய்யும் போது, "தொலைபேசி ஏன் பயன்படுத்த முடியாது? உங்களால் முடிந்தால் அவர்களை வெளியில் செல்லுமாறு கூறுங்கள்" என, தவிசாளரை பார்த்து கேட்டார்.

## பெருந்தொகையான எறிகணைகள்...

குறித்ர பகுதியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (05), எறிகணை ஒன்றை வீட்டுக்குள் வைத்து கிறைண்டரினல் வெட்டியபோது, குறித்த எறிகணை வெடித்துள்ளது. இதில், 25 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததுடன், 13 வயதுடைய சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில், ஏற்கெனவே சம்பவம் இடம்பெற்ற வீட்டில் ஒரு சில வெடி பொருள்கள் அன்றைய தினம் அடையாளம் காணப்பட்டன. தொடர்ந்து , விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, குறித்த வீட்டில் இருந்தும் வீட்டு வளவுக்குள் இருந்தும், பெருந்தொகையான வெடிபொருள்கள, நேற்று காலை மீட்கப்பட்டுள்ளன.

## போராட்டத்துக்கு பலத்த ஆதரவு

அவ்வாறே அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கமும் ஆதரவை வழங்கியுள்ளதாக, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் கே.எம். கபீர் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவுக்கு வழங்க தீர்மானிக்கவில்லை

இதனால், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுக்கு எவ்விதமான பிரச்சினைகளும் ஏற்படாது என்றார்.

பாகிஸ்தான் சியல்கொட் பிரதேசத்தில் அடித்து, தீயிட்டு கொளுத்தி படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமார தியவடன சம்பவத்தால், இருநாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவில் ஏதாவது பாதிப்பு ஏற்படுமாவென எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ரமேஷ் பத்திரண,

இந்த விவகாரம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி, குற்றவாளிகளுக்கு அதியுச்ச தண்டனையை பெற்றுத்தருவதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்திருந்தார். இதேவேளை, பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் தேடப்பட்டுவருகின்றனர். சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில், அந்த உறவிலும் எவ்விதமான கீறல்களும் ஏற்படாது என்றார். மற்றுமொரு கேள்வியான, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்புக்கு ஆதரவளித்த எதிர்கட்சி எம்.பிக்கள் ஏழு பேருக்கும் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தரப்பின் பக்கம் ஆசனங்களை ஒதுக்குமாறு எதிரணி கோரியுள்ளது. அப்படி ஏதாவது நடக்குமா? அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டது. பாராளுமன்றத்தில் ஒரு பக்கத்தில் 113 ஆசனங்களும் மற்றைய பக்கத்தில் 112 ஆசனங்களுமே உள்ளன. இந்நிலையில், எம்மிடம் மீதமிருக்கும் உறுப்பினர்கள், எதிரணியின் பக்கமே அமரவேண்டும். யாரை, எங்கே அமரவைக்க வேண்டும் என்பதை சபாநாயகரே தீர்மானிப்பார் என்றார். குறிக்கிட்டு கேள்வியெழுப்பிய அந்த ஊடகவியலாளர், " அப்படியாயின் அந்த ஏழு உறுப்பினர்களுக்கும், ஏதாவது பதவிகள் வழங்கப்படுமா?" என வினவினார். அதற்குப் பதிலளித்த ரமேஷ் பத்திரண, " அது தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை" என்றார்.

## இன்றும் மாலையில்...

இந்நிலையில், நேற்றும் (07) மாலையில் மின்தடை ஒருமணிநேரம் ஏற்படுத்தப்பட்டது.

நாடளாவிய ரீதியில் டிசெம்பர் 03ஆம் திகதி ஏற்பட்ட பாரிய மின்வெட்டைத் தொடர்ந்து, நுரைச்சோலை அனல்மின் நிலையம் முழுமையாகச் செயற்படும் வரை நாட்டின் சில பகுதிகளில் ஒரு மணி நேரத்துக்கு மின்சார விநியோகத்தில் அவ்வப்போது இடையூறுகள் ஏற்படும் என மின்சக்தி அமைச்சு அண்மையில் அறிவித்தது.

அதன்அடிப்படையில் 900 மெகாவோற் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் சேர்ப்பதற்கு குறைந்தது மூன்று நாட்கள் ஆகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்றையதினத்துக்குப் பின்னர், நாடளாவிய ரீதியில் மின் விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்று எதிர்பார்ப்பதாகவும் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றுவதற்கா

# நிதி உதவி?

## சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கேள்வி

பா. நிரோஸ்



தமிழ் மக்களை இல்லாதொழிக்கும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ் மக்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கவா, சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு உதவுகின்றன எனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் இருந்த 1984ஆம் ஆண்டு இராணுவம், ஊர்காவற்படையினர் போன்றோரின் அச்சுறுத்தலால் வெளியேறியவர்கள், மீள அங்கு குடியேற அனுமதிக்கப்படவில்லை. பெரியக்கட்டி குளம், ஒதுக்ககாட்டு பகுதியில் உள்ள கச்சல்சம்பளம் குளம் என்று சொல்லப்படுகிற அந்தக் கிராமத்துக்கு 'சபுமல்தென்ன' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு, பாரிய விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் விவசாயம் செய்துவந்த நிலங்களில், சிங்கள மக்கள் திட்டமிடப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளனர். தமிழ் இனத்தை இல்லாதொழிக்கும் வேலைத் திட்டங்களே இங்கு நடக்கின்றன. ஒதுக்கக்காடு பகுதியில் தமிழர்கள் மீள குடியேற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட இலங்கைக்கு உதவும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள், தமிழர்களின் இனப் பரம்பலை மாற்றியமைத்து, தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாதொழிக்க அரசாங்கத்துக்கு உதவுகிறீர்களா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.



வடக்கு, கிழக்கு காணிகள் அபகரித்து

## பகிர்ந்தளிக்கப்படுகிறது

பா. நிரோஸ்



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரின் இனப் பரம்பலைக் குறைப்பதற்காக, திட்டமிட்ட காணி அபகரிப்புகள் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றஞ்சாட்டிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், புலம்பெயர்ந்தோரின் காணிகளும் அபகரிக்கப்படுவதால், மக்கள் மீள்குடியேறுவதில் பிரச்சினைகள் காணப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், வடக்குக், கிழக்கு மாகாணங்களில் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. கலவரம், யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்தவர்களை மீள அந்தக் காணிகளில் குடியேற இடமளிக்கப்படுவதில்லை. காடுகளைப் பாதுகாப்பதாகக் கூறியே இந்தக் காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

காடு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. மக்கள் வாழ்ந்த சான்றுகளைக் கொண்ட நெடுங்கேணி, மணலாறு அருகில் எல்லாம் பல இடங்கள் உள்ளன. இந்த இடங்களைக் காட்டுப் பிரதேசங்கள் என்றுகூறி ஒதுக்கப்படுகிறது. இது பாரதூரமான பிரச்சினை.

ஆயிரக்கணக்கானோர் தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் மீளக்குடியேறுவதற்கு காணிகள் இல்லை. அவர்களது சொந்தக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

வடக்குக், கிழக்கின் இனப்பரம்பலை மாற்றுவதற்காகவே காணிகள் அபகரிக்கப்படுகின்றன. இந்த மாகாணங்களில் உள்ள காணிகள் வெளிமாவட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

10 வருடங்களாக பதவியில்

# இருப்பது எப்படி?

பா. நிரோஸ்



மட்டக்களப்பு மாவட்டத்தில் புவி சரிதவியல் திணைக்களத்தின் முகாமையாளராக 10 வருடங்களுக்கும் மேலாக ஒருவர் கடமையாற்றுவதாக கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

குறித்த முகாமையாளரால் எவ்வாறு 10 வருடங்கள் தொடர்ந்து அந்த; பதவியில் இருக்க முடிகிறது எனக் கேள்வி எழுப்பிய அவர், இது தொடர்பில் மக்களுக்குப் பல்வேறு சந்தேகங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (07) சுற்றாடல் அமைச்சு தொடர்பில் கேள்வி ஒன்றை முன்வைத்து தொடர்ந்து உரையாற்றிய அவர், மட்டக்களப்பில் நாளொன்றுக்கு 500 இக்கும் அதிகமான லொறிகள் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றன. ரயில்கள் ஊடாகவும் மணல் வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

அரச திணைக்களங்களிலே உயர் அதிகாரிகள் கடமையாற்றும்போது, ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றபோதிலும், புவி சரிதவியல் திணைக்களத்தின் முகாமையாளர் கடந்த 10 வருடங்களாக அந்தப் பதவியில் இருக்கிறார் என்றார்.

இதற்குப் பதிலளித்த சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, இது தொடர்பான தகவல்களை பாராளுமன்ற உறுப்பினர் தனக்கு வழங்கும் பட்சத்தில், உரிய நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்றார்.

# இராணுவ ஆட்சியை அனுமதிக்க முடியாது



பா. நிரோஸ்

ஆங் சான் சூகியின் சிறைத் தண்டனை தொடர்பில் அரசாங்கம் கவலை அடைவதாகத் தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராணுவ ஆட்சிகளை நாம் எதிர்க்கிறோம். இராணுவ ஆட்சியை அனுமதிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

ஆங் சான் சூகியின் சிறைத் தண்டனை தொடர்பில், அரசாங்கம் ஏன் அமைதியாக இருக்கிறது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே, அமைச்சர் வாசு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஆங் சான் சூகி தவறுகள் செய்துள்ளதாக மியன்மாரில் ஆட்சியில் உள்ள இராணுவம் சொல்கிறது. எந்த நாடாக இருந்தாலும், இராணுவ ஆட்சிக்கு நாம் எப்போதும் விருப்பமில்லை. இராணுவ ஆட்சியை நாம் எதிர்க்கின்றோம்.

ஆங் சான் சூகியின் கைதின் பின்னணி தொடர்பில் எமக்குத் தெரியாது. அது தொடர்பில் ஆராய்கிறோம். ஆங் சான் சூகிக்கு அந்நாட்டு நீதிமன்றமே தண்டனை வழங்கியுள்ளது. இதனை சபையில் எதிர்ப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை எனவும் வாசு கூறினார்.

எதிர்க்கட்சி தலைவர் பதவிக்காக

# சஜித் வருவார்

பா. நிரோஸ்



சபை நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தியினர் புறக்கணித்திருந்தாலும், எதிர்க்கட்சி தலைவர் பதவி பறிபோகும் என்கிற அச்சத்தால், சபை நடவடிக்கைகளில் சஜித் பிரேமதாஸ விரைவில் கலந்துகொள்வார் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜோன்ஸ்டன், ஐக்கிய மக்கள் சக்தி சபை நடவடிக்கைகளை புறக்கணித்துள்ள நிலையில், சபைக்கு ரணில் வந்திருப்பதால் அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மிகுந்த அச்சத்தில் உள்ளதாக அக்கட்சியின் எம்.பி ஒருவர் என்னிடம் தொலைபேசியில் கூறினார் என்றார்.

மேலும், தனது எதிர்க்கட்சி தலைவர் பதவி பறிபோகும் என்கிற அச்சத்தில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, சபை நடவடிக்கைகளில் விரைவாக கலந்துகொள்வார் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஜனநாயகம் இல்லை; பாதுகாப்பு இல்லை என்று சபை நடவடிக்கைகளை புறக்கணித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியினர், பாராளுமன்றத்தின் சிற்றுண்டிச்சாலைகளுக்கு மாத்திரம் எவ்வாறு வருகிறார்கள்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஊழல் மோசடிகள் தொடர்பில், குழுநிலை விவாதத்தில் ஆளுந்தரப்பினர் வெளிப்படுத்துவார்கள் என்கிற அச்சத்திலேயே சபை நடவடிக்கைகளை சஜித் புறக்கணிக்கிறார். எனினும் அவர் விரைவில் சபைக்கு வருவார் என எதிர்பார்க்கிறேன் எனவும் தெரிவித்தார்.

# உருவாக்கிய செய்தி; பொய்யான செய்தி

2022 அடுத்த வருடத்தில் பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்து எந்தவித பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளர் வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (07) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இதில் எந்தவித அடிப்படையும் இல்லை. இது உண்மைக்கு புறம்பான கூற்றாகும்.

இங்கு கேள்வியெழுப்பிய ஊடகவியலாளர், பிரதமர் பதவிக்காக, பெசில் ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன. அதில், சர்வதேச ரீதியில் கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே, ரணில் விக்கிமசிங்கவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது என வினவினார்.

அதற்குப் பதிலளித்த ரமேஷ் பத்திரண இது உருவாக்கிய செய்தி, அச்செய்தியும் பொய்யானது என்றார்.

# உரைப் பையில் கடலாமை கடத்தல்

## மூவர் சிக்கினர்

ரஸீன் ரஸ்மின்



கற்பிட்டி, கப்பலடி கடற்கரைப் பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் உரைப் பையில் கடலாமையை கடத்திச் செல்ல முற்பட்ட மூவரை, நேற்று முன்தினம் (06) மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, கற்பிட்டி, கொச்சிக்கடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கடலாமை ஒலிவ நிற (Olive Redly) வகையைச் சார்ந்தது என வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இக் கடலாமை, இறைச்சிக்காகப் பயன்படுத்துவதற்காக பிடிக்கப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரையும் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட கடலாமை காயங்களுக்குள்ளாகிய நிலையில் காணப்பட்டமையால் சிகிச்சையளிப்பதற்காக கற்பிட்டி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மகள் துஷ்பிரயோகம்;

## பஸ் தரிப்பிடத்தில் தந்தை கைது

பாறுக் ஷிஹான், எம்.எஸ்.எம். நூர்தீன்



தனது மகளான 13 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து தப்பிச் செல்ல முயன்றவரை, காத்தான்குடி பொலிஸார், நேற்று (07) காலை கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி, காத்தான்குடி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.


குறித்த சம்பவமானது, மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பகுதியில் நேற்று முன்தினம் (06) மாலை இடம்பெற்றுள்ளது.

தனது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த தந்தை இரவு கொழும்புக்குத் தப்பி செல்வதற்காக காத்தான்குடி பஸ் தரிப்பிடத்தில் மறைந்திருந்த போது, காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையில் சென்ற பொலிஸார், சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதானவர் 36 வயதுடையவர் என்பதுடன், இவரது மனைவி மத்திய கிழக்கு நாடொன்றில் பணியாற்றி வருவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இராணுவ பிரதானியாக

# மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே நியமனம்



இலங்கை இராணுவத்தின் 59ஆவது பதவி நிலை பிரதானியாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் நேற்று (07) முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

கஜபா படையணியை சேர்ந்த மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே இலங்கை இராணுவ தொண்டர் படையணியின் தளபதியாக பதவி வகித்திருந்தார்.

இந்த நிலையில், இராணுவத்தின் 58ஆவது பதவி நிலை பிரதானியான மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இதனையடுத்து, மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



கிழக்கு பாலர் பாடசாலை பணியகத்தில்

# முஸ்லிம்களுக்கு கதவடைப்பு

## இம்ரான் எம்.பி பகிரங்க குற்றச்சாட்டு

ஹஸ்பர் ஏ ஹலீம், எம்.முபாரக்

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தில் முஸ்லிம் பணிப்பளார்களுக்கு கதவடைப்பு செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன், தமிழில் பணிபுரிய முடியாத தவிசாளரும் பொதுமுகாமையாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் இதற்கு அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் எம்.பிக்கள் அனுமதி வழங்கியுள்ளனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்

இது தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (07) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, "கிழக்கு மாகாணத்தில் 75 சதவீதத்துக்கும் மேல் தமிழ் பேசும் மாணவர்களைக் கொண்ட பாலர் பாடசாலைகள் இயங்குகின்றன. இந்தப் பாடசாலைகளை முகாமை செய்யும் கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகம் மட்டக்களப்பில் இயங்குகின்றது.

"இந்தப் பணியகத்துக்கு தமிழில் பணிபுரிய முடியாத தவிசாளரும், பொதுமுகாமையாளரும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் பாலர் பாடசாலை பணியகத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்களும், பாலர் பாடசாலை ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

"இது குறித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட போதும் அவர்கள் எவ்வித கவனமும் செலுத்தவில்லை என மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர்கள் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

"அதேபோல, கிழக்கு மாகாணத்தில் 40 சதவீதத்துக்கு மேல் முஸ்லிம் மாணவர்களைக் கொண்ட பாலர் பாடசாலைகள் இயங்குகின்ற போதிலும் இந்தப் பாலர் பணியகத்தின் பணிப்பாளர் சபையில் முஸ்லிம்கள் எவரும் நியமிக்கப்பட வில்லை எனவும் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

"கிழக்கிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் அனைவரும் மக்களின் உரிமை என்ற கோஷத்தை முன்வைத்தே தேர்தல் பிரச்சாரம் செய்தோம். அதனால் தான் மக்கள் எங்களுக்கு வாக்களித்தார்கள்.

"எனவே, கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தில் முஸ்லிம்களுக்கு கதவடைப்புச் செய்யப் பட்டதற்கும், தமிழில் பணிபுரிய முடியாத தவிசாளரும், பொதுமுகாமையாளரும் நியமிக்கப்பட்டதற்கும் கிழக்கு மாகாண அரசு ஆதரவு எம். பிக்கள் அனுசரணை வழங்கவில்லை என்றால், தமிழில் பணி புரியக் கூடிய ஒருவரையும், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தையும் உறுதிப்படுத்திக் காட்டட்டும் என்று சவால் விடுக்கின்றேன்" என அவ்வறிக்கையில் இம்ரான் எம்.பி தெரிவித்துள்ளார்.

திடீர் கொந்தளிப்பு; அதிகாலை வேளை

# கடல் நீர் உட்புகுந்தது

## கோவில்கள், வீடுகளுக்குப் பாதிப்பு

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை, பாண்டிருப்பு பிரதேசங்களில் நேற்று (07) அதிகாலை திடீரென ஏற்பட்ட கடற்கொந்தளிப்புக் காரணமாக கடற்கரை வீதியையும் தாண்டி குடியிருப்புப் பகுதிகளுக்குள் கடல் நீர் புகுந்து, வெள்ளக்காடாக மாறியது.

இதனால், கல்முனை மாமாங்க விநாயகர் கோவில், பாண்டிருப்பு விஷ்ணு கோவில் பகுதிகளும் பல வீடு, வளவுகளும் வெள்ளத்தில் மூழ்கின.

கடல் நீர் உட்புகுந்தமையால், பிரதேச மக்கள் அச்சமும் கலவரமும் அடைந்த நிலையில், அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஹென்றி மகேந்திரன், மாநகர மேயர், ஆணையாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியதை அடுத்து, மாநகர சபையின் கனரக இயந்திரங்கள் மூலம் அப்பகுதிகளில் தேங்கியுள்ள கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கல்முனை, பாண்டிருப்பு பிரதேசங்களில் அண்மைக் காலமாகக் கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனக் கோரி, கல்முனை மாநகர சபையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







## வெற்றுக் காணியில் வெடிக்காத குண்டு

■ எப்.முபாரக்

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மெடியாவ வடக்குப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான வெற்றுக் காணியில் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த மோட்டார் குண்டு, தம்பலகாமம் விசேட பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், நேற்று முன்தினம் (06) மாலை மீட்கப்பட்டுள்ளது. கந்தளாய் நீதிமன்ற நீதவானின் அனுமதியின் பின்னர் குறித்த மோட்டார் குண்டை செயலிழக்க வைப்பது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.





கிழக்கு மாகாணத்துக்கு

## புதிய பிரதம செயலாளர் நியமனம்

■ எஸ்.எம்.றனீஸ், அ.அச்சுதன், ஒலுமுதீன் கியாஸ், எப்.முபாரக், ஹஸ்பர் ஏ ஹலீம், பாறுக் ஷிஹான்

கிழக்கு மாகாண புதிய பிரதம செயலாளராக டி.எம்.எல்.பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமைகளை, திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் வைத்து சமயத் தலைவர்களின் ஆசிர்வாதத்துடன், உத்தியோகபூர்வமாக நேற்று (07) ஆரம்பித்தார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாடிகோராள, திணைக்களத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான டி.எம். எல்.பண்டாரநாயக்க, இதற்கு முன்னர் அம்பாறை மாவட்டச் செயலாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை பட்ஜெட்டுக்கு

## ஆதரவு வழங்கக் கூடாதென தீர்மானம்

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

கல்முனை மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பு, இன்று (08) நடைபெறவுள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு இலங்கை தமிழரசு கட்சி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கக் கூடாதென கட்சியின் கல்முனை கிளை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தத் தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, நேற்று முன்தினம் (06)மாலை கல்முனையில் நடைபெற்றது.

கல்முனைத் தொகுதி கிளை செயலாளர் சிவஞானம் ஜெயக்குமார், இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் துணை செயலாளர் அ.நிதர்ஜன் ஆகியோர் இங்கு கருத்துகளை வெளியிட்டனர்.

இவர்கள் கருத்துரைக்கையில், “கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வாழ் தமிழர்களின் பிரச்சினையாகப் புரையோடிப்போயுள்ள கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் பலமுறை முஸ்லிம் காங்கிரஸ் தலைமை, எல்லை நிர்ணய பிரச்சினைகள் தொடர்பில் இன நல்லிணக்க ரீதியாகச் செயற்படாத சூழ்நிலையில், தொடர்ச்சியாக கல்முனை மாநகர சபை வரவு - செலவுத் திட்டத்துக்கும் முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சிக்கும் ஆதரவு வழங்கக்கூடாது என தமிழரசுக் கட்சியின் கல்முனை தொகுதிக் கிளை உறுப்பினர்கள் தீர்மானம் எடுத்துள்ளோம்” என்றனர்.




## மூதூர் பட்ஜெட் நிறைவேற்றம்

■ அ.அச்சுதன்

மூதூர் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் தி ட்டம் பெரும்பான்மையான வாக்குகளால் நேற்று (07) நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 20 வாக்குகளும் எதிராக 01 வாக்கும் அளிக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியில் போட்டியிட்டு, போனஸ் ஆசனத்தின் மூலம் தெரிவான ஏ.எல்.எம். அஹ்ஷன் என்பவரே எதிராக வாக்களித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்டு, போனஸ் ஆசனத்தின் மூலம் தெரிவான ஏ.டபிள்யூ. அஷாம் மௌலவி என்ற உறுப்பினர் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

தங்கம் அகழ்வு பணி நிறைவு: அறிக்கை சமர்ப்பிக்குமாறு

# உத்தரவு

■ செ. கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, சுதந்திரபுரம் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தங்கம் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணி, நேற்று முன்தினம் (06) மாலை நிறைவுக்கு வந்துள்ளதுடன், அது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ரி.சரவணராஜா உத்தரவிட்டுள்ளார்.

சுதந்திரபுரம் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தங்கம் புதைக்கப்பட்டுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில், புதுக்குடியிருப்பு பொலிஸாரால் வழக்கு தொடரப்பட்டது.

அது தொடர்பில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோண்டும் நடவடிக்கைகள், டிசெம்பர் 2ஆம் திகதி மாலை தொடக்கப்பட்டு, அண்மைய நாள்களாக பெய்த கனமழை காரணமாக, குறித்த பகுதிக்கு கனரக இயந்திரங்களை கொண்டு செல்ல முடியாத நிலையில், மறுநாள் 3ஆம் திகதி, அகழ்வுப் பணி ஒத்திவைக்கப்பட்டது

இதற்கமைய, 3ஆம் திகதி, மீண்டும் அகழ்வுப் பணிகள் முல்லைத்தீவு நீதவான் ரி. சரவணராஜா முன்னிலையில் ஆரம்பமாகி இடம்பெற்றன.

இந்நிலையில் குறித்த குழிகளுக்குள் வெள்ளநீர் தேங்கி அதனை அகற்ற முடியாத நிலை உருவானதாலும், கனரக இயந்திரம் நிலத்தில் புதையுண்டதாலும் அகழ்வுப் பணிகள் பாதியில் இடைநிறுத்தப்பட்டதோடு, மீண்டும் குறித்த அகழ்வுப் பணி, நேற்று முன்தினம் (06) வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் (06), மீண்டும், மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பொலிஸார், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், கிராம அலுவலகர்கள், படையினர், சிறப்பு அதிரடிப்படையினர், வைத்தியசாலை நிர்வாகத்தினர் உள்ளிட்டவர்கள், குறித்த பகுதியில் பிரசன்னமாகியிருந்தனர்.

தோண்டப்படப்பட கிடங்குகளில் தண்ணீர் நிரம்பிக் காணப்படுவதால், தண்ணீரை இறைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு, தொடர்ந்து கனரக இயந்திரம் கொண்டு, சுமார் பத்து அடி ஆழம் வரையில் தோண்டப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த பகுதியில் எதுவித பொருள்களும் கிடைக்காத நிலையில், மாலை 5.15 மணிளவில், அகழ்வு பணியை, நீதவான் நிறைவுக்கு கொண்டு வந்ததார்.

அத்துடன், இதன்போது எடுக்கப்பட்ட சில சான்று பொருள்களை நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறும், இரண்டு குழிகளையும் தோண்டியவர்கள் யார் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணை செய்து, நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும், புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு, நீதவான் கட்டளை பிறப்பித்துள்ளார்.

மேலும், இது குறித்த வழக்கு விசாரணை, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.





கடற்படையால் கைது செய்யப்பட்டவர்களுக்கு ஆதரவாக

## மாதகலில் மக்கள் போராட்டம்

■ எஸ்.நிதர்ஷன்

கஞ்சா கடத்திய சந்தேகத்தில், கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு ஆதரவாக, அப்பகுதி மக்கள், நேற்று (07), போராட்டத்தில் ஈடுபட்டனர்

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், “குறித்த இருவரும் கடலுக்கு சென்று திரும்பி வரும் வேளையில் கடற்படையினர் அவர்களை வழிமறித்தனர்.

“இதன்போது கடற்படையினரின் கட்டளைக்கு கட்டுப்பட்டு அவர்கள் அவ்விடத்தில் நின்றனர். இந்நிலையில், கடலில் மிதந்து வந்த, சுமார் 276 கிலோ கிராம் கஞ்சாவை அவர்கள் கடத்தியதாகத் தெரிவித்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

“கைது செய்யப்ப ட்டவர்கள் பயணித்த படகு சிறியது. அந்தப் படகில் தொழில் முதல்கள் இருந்தன. இந்நிலையில் 276 கிலோ கிராம் கஞ்சாவை எவ்வாறு அந்தப் படகில் கொண்டு வருவது?

“அத்துடன், அவர்கள் பயணித்த படகின் ஜி.பி. எஸ்ஸினை பார்த்தால், அவர்கள் எங்கு சென்றுள்ளார்கள்? கஞ்சா கடத்தும் இடத்துக்கு சென்று உள்ளார்களா எனத் தெரியவரும்.

“கைது செய்யப்பட்டவர்களை கடற்படையினர், ‘நீங்கள் காணி சுவீகரிப்பு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தானே” என, ஈவிரக்கமற்ற முறையில் தாக்கியுள்ளனர். நாங்கள் அவர்களைப் பார்க்கச் சென்ற வேளை அவர்கள் எமக்கு விடயத்தை கூறியுள்ளார்கள்.

“எனவே, கைது செய்யப்பட்டவர்களை, சரியாக விசாரணை செய்து உண்மை தகவலை வெளிப்படுத்த வேண்டும்” என கோரிக்கை விடுத்தனர்.





## இலவச மருத்துவ முகாம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம், பூநகரி, வாடியடி புனித மரியன்னை தேவாலயத்தில், நேற்று (07) காலை 9 மணியளவில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக, மத வழிபாட்டுத் தலங்களில் கடமைபுரியும் மதகுருமார்கள், ஊழியர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நடமாடும் சேவையில், பொதுமக்களும் கலந்துகொண்டு சிகிச்சைகளையும் மருத்துவ ஆலோசனையையும் பெற்றனர்.

குறித்த நடமாடும் சேவைக்கான அனுசரணையை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



வவுனியா வடக்கில்

## 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர்

■ க. அகரன்

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது கொரோனா தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியை வழங்க, சுகாதார பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், இன்று (08), கனகராசன்குளம் வைத்தியசாலையிலும், நாளை (09) புளியங்குளம் வைத்தியசாலையிலும், வெள்ளிக்கிழமை (10) நைனாமடு பொதுநோக்கு மண்டபத்திலும், திங்கட்கிழமை (13) நெடுங்கேணி வைத்தியசாலையிலும், செவ்வாய்க்கிழமை (14) கற்குளம் பொதுநோக்கு மண்டபத்திலுமாக 5 நிலையங்களில், காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை, பைசர் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

### லிந்துலை – தலவாக்கலை நகரசபை

# பட்ஜெட் தோல்வி

எம்.கிருஸ்ணா

லிந்துலை - தலவாக்கலை நகரசபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஒரு வாக்கால் தோல்வியடைந்துள்ளது.

நகரசபைத் தலைவர் லெட்சுமணன் பாரதிதாஸன் தலைமையில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பு, நேற்று (07) இடம்பெற்றது.

இதன்போது திட்டத்துக்கு ஆதரவாக 4 வாக்குகளும் எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன.



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த உறுப்பினர்களான சந்தன குணதிலக, பிரசன்ன விதானகே ஆகிய இருவருமே வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர். அத்துடன் சுயேட்சை குழு உறுப்பினர் ஒருவர், நேற்றையதினம் சபைக்கு சமூகம் தரவில்லை.

இதேவேளை மொட்டு அணியை சேர்ந்த மயில்வாகனம் பரமானந்தன் என்ற உறுப்பினரது இடத்துக்கு அஸங்க சம்பத் என்பவருக்கு நியமனம் வழங்கப்படவிருந்த நிலையில், இந்த நியமனம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பரமானந்தன், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முறையிட்டதையடுத்து மாற்று நியமனத்துக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த உறுப்பினரும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள முடியாத பட்சத்தில் இன்றைய வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளது.

அத்துடன், நீதிமன்றத் தடையுத்தரவால் புதிதாக நியமனம் வழங்கப்படவிருந்த அசங்க சம்பத் என்பவரை சபைக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 60க்கு மேற்பட்டோருக்கு

# நுவரெலியாவில் பூஸ்டர்

பி.கேதீஸ்

நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசிகள், நுவரெலியா மாநகர சபை சுகாதார பிரிவு காரியாலயத்தில் நேற்று (07) முதல் செலுத்தப்படுவதாக நுவரெலியா மாநகர சபையின் பொதுச் சுகாதார அதிகாரி ஆர்.எம். பீ. எஸ். தெல்பிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்ட 9 வட்டாரங்களில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நேற்று முதல் கொரோனா தொற்று தடுப்பூசிகள் செலுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்ககப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, 4 வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரம் கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.




இதனை தொடர்ந்து ஏனைய வட்டாரங்களில் உள்ளவர்களுக்கும் தடுப்பூசிகள் செலுத்தப்படும்.

மாநகர சபை எல்லைக்குள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டதன் பின்னர் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் கொரோனா தடுப்பூசிகள் செலுத்தும் வேலைத்திட்டம் ஆரப்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நுவரெலியா பொது வைத்தியசாலையிலும் கடந்த வியாழக்கிழமை முதல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசிகள் தொடர்ந்து செலுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியர் உதவியாளராக சேவையாற்றிய

# 306 பேருக்கு 15ஆம் திகதி நியமனம்

பி.கேதீஸ், கே.சுந்தரலிங்கம்

ஆசிரியர் உதவியாளராக சேவையாற்றி வந்த 306 பேருக்கு எதிர்வரும் 15ஆம் திகதி நியமனங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் கணபதி கனகராஜ் குறிப்பிட்டுள்ளார்.

உப தலைவர் கணபதி கனகராஜ் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கு இணங்க, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயின் வழிகாட்டலுக்கமைவாக ஆசிரிய உதவியாளராகச் சேவையாற்றி வந்த அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளது.

பெருந்தோட்ட பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் 3,000 உதவி ஆசிரியர் நியமனங்கள் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானால் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

குறித்த நியமனங்கள் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் நிரந்தரமாக்கப்படும் என்ற நிபந்தினையின்



அடிப்படையிலேயே ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

எனினும், அவர்களின் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் கடந்த நல்லாட்சி அரசாங்கம், அவர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

உதவி ஆசிரியர்கள் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஆறாயிரம் மற்றும் பத்தாயிரம் ரூபாய் ஊதியத்தில் மிக கஷ்டமான நிலையிலே சேவையாற்றி வந்துள்ளனர்.

அந்த வகையில் அவர்களுடைய பிரச்சினைகளை காலத்துக்குக் காலம் எடுத்துச் சென்று வலியுறுத்தியமையால் சிறிது சிறிதாக நியமனங்களை வழங்கப்பட்டிருந்தன.

மேலும், எஞ்சியுள்ள நியமனங்ளை வழங்குமாறு இராஜாங்க அமைச்சர் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இந்த நியமனங்கள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

## நினைவுச் சின்னம்...



இரத்தினபுரி மாவட்ட செயலாளராக மாலனி லொக்குபோத்தாகம பதவியேற்று 5 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு அவருக்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்: சிவாணி ஸ்ரீ)

# மின்கம்பியில் சிக்கி காட்டு யானை பலி

சுமணசிறி குணதிலக்க

தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரியாரா, இந்துனில்புர பகுதியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த காட்டு யானையொன்றின் சடலம், திங்கட்கிழமை (06) கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தோட்டம் ஒன்றினூடாக யானை சென்ற போது, மின்சாரக் கம்பி அறுந்து விழுந்ததில் யானை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

30 வயதுடைய இந்த யானை சுமார் 08 அடி உயரம் கொண்டது என்றும் யானையின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை நேற்று (07) நடைபெறவிருந்தாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தனமல்வில பொலிஸார், தனமல்வில வனஜீவராசிகள் அலுவலகத்தினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நானுஓயாவிலும் அடுப்பு வெடித்தது

டி சந்ரு, துவாரகஷான்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா, கிளாரண்டன் மேற்பிரிவில் நேற்று (07) காலை எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

உணவு தயாரிப்பதற்காக நேற்று காலை, எரிவாயு அடுப்பைப் பற்றவைத்த போது குறித்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இவ்வெடிப்புச் சம்பவத்தில் உயிராபத்துக்களோ, காயங்களோ ஏற்படவில்லை எனவும் சமையலறையும் சமையல் பாத்திரங்களும் மாத்திரமே பாதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. குறித்த வெடிப்புச் சம்பவம் தொடர்பாக நானுஓயா பொலிஸாருக்கும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எரிவாயு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும்போது வாடிக்கையாளர்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக லிட்ரோ நிறுவனத்தால் வழங்கப்பட்ட 1311 என்ற அவசர இலக்கத்தை வீட்டின் உரிமையாளர் சுமார் மூன்று நிமிடங்களாக தொடர்பு ஏற்படுத்த முயற்சித்த போதிலும் சம்பந்தப்பட்ட எரிவாயு உரிமையாளர்களிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




## தெமோதரை, சௌதம் பாடசாலைக்கு புதிய பாலம்

தெமோதரை தோட்டத்திலுள்ள சௌதம் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் பயன்படுத்தும் மரகட்டைகளாலான பாலம் புதுப்பிக்கப்பட்டு, பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமானால் மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

தெமோதரை தோட்டத்திலுள்ள சௌதம் பாடசாலைக்கு, அதிக மழை காலப்பகுதியில் மரகட்டைகளிலான பாலத்தின் ஊடாகப் பாடசாலைக்கு செல்ல மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இவ்விடயம், செந்தில் தொண்டமானிடம் கவனத்துக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களால் கொண்டுசெல்லப்பட்டு, முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, இப்பாலம் புதுப்பிக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டமானது, செந்தில் தொண்டமானுக்கு வழங்கப்பட்ட விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



### பதுளை அரச செயலங்களின் செயற்பாடுகளில்

# அரவிந்தகுமார் அதிருப்தி

எம். செல்வராஜா



வயோதிபர்களுக்கு அரசினால் வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவுகள் விடயத்தில், பதுளை மாவட்ட அரச செயலகங்கள் செயற்படும் விதம் திருப்தியைத் தரவில்லை என்று பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தி, 70 வயதைத் தாண்டியவர்கள் அனைவருக்கும், மாதாந்த வயோதிபக் கொடுப்பனவுகளை வழங்க ஆவன செய்யும்படியும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அ. அரவிந்தகுமார் எம்.பியால், இலங்கை சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் தேசிய வயோதிப செயலகப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதமொன்றிலேயே மேற்கண்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: பதுளை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வரும் மாதாந்த வயோதிபக் கொடுப்பனவுகள், புதிதாக வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

வயோதிப கொடுப்பனவுகள் வழங்கப்படும் பட்டியலில் ஒருவர் இறந்தால் மட்டுமே, புதியவரொருவர் இணைத்துக்கொள்ளப்பட்டு, அவருக்கு மாதாந்தக் கொடுப்பனவு புதிதாக வழங்கப்படுகிறது.

அதைவிடுத்து புதியவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளன.

இது விடயமாக பிரதேச செயலாளர்களிடம் வினவும் போது, வயோதிபர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. இதனால் 70 வயதைத் தாண்டிய புதியவர்களை இணைத்துக்கொள்ள முடியாதுள்ளது. ஆகையால், இதனை நிறுத்தியுள்ளோம் என்று பதில் கிடைக்கின்றது.

70 வயதைத் தாண்டியவர்களுக்கு வழங்கப்படும் வயோதிபக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருப்பதால், வயோதிபர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஆகவே, இது விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தி, 70 வயதைத் தாண்டிய அனைவருக்கும் மாதாந்த வயோதிபக் கொடுப்பனவுகளைக் கிரமமாக வழங்குவதுடன், அக்கொடுப்பனவுகளை அதிகரிக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### இரண்டு ஆறுகளிலிருந்து

# 2 பெண்களின் சடலங்கள் மீட்பு



எஸ்.கணேசன், எம்.கிருஸ்ணா, எஸ்.சதீஸ்

ஹட்டன் ஓயா, டயகம ஆக்ரோயா ஆறு ஆகியவற்றிலிருந்து பெண்கள் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஹட்டன் - ஸ்டிதரன் தோட்டம், புருட்ஹில் பிரிவில் உள்ள மகாவலி கங்கைக்கு நீர்வழங்கும் கிளை ஆறான ஹட்டன் ஓயாவிலிருந்து பெண்ணின் சடலமொன்று, நேற்று (07) காலை மீட்கப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கு அமையவே சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பெண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து ஆற்றில் வீசிச் சென்றார்களா என பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம், இதுவரை யாருடையது என அடையாளம் காணப்படவில்லை. சுமார் 50 - 60க்கும் இடையிலான வயது மதிக்கத்தக்க பெண் எனவும் மேலதிக விசாரணைகளை தொடர்வதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி



வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டயகம ஆக்ரோயா ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம், திங்கட்கிழமை (06) மாலை மீட்கப்பட்டதாக டயகம பொலிஸார் தெரிவத்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட பெண் டயகம 5ம் பிரிவை சேர்ந்த 53 வயதுடைய சாமிநாதன் தங்கேஸ்வரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த ஆற்றில் பெண் ஒருவரின் சடலம் மிதப்பதைக் கண்ட பிரதேச மக்கள், உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, சம்பவ ஸ்தலத்திற்கு விரைந்த டயகம பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

மரண விசாரணைகளின் பின்னர் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீராப்புக்கு கொக்கரித்து வாலைச் சுருட்டிக்கொள்ளும் துர்பாக்கியம்

ஒவ்வொரு வீட்டிலும் சமையலறை மீதான அச்சம், நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. எப்போது வெடிக்குமோ, என்ன ஆகுமோ? என்ற பேரச்சத்தில் பலரும் பொழுதுகளைக் கழித்துக்கொண்டிருக்கின்றனர். இதற்கிடையில், இன்னும் சில நாள்களுக்கு அவதானத்துடன் இருக்குமாறு விடுத்த அறிவுரை, அச்சத்தை உச்சத்துக்கே கொண்டு சென்றுவிட்டுள்ளது.

சந்தையில் காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதன்பின்னர், காஸ் சிலிண்டர்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. பொதுமக்கள் மாற்று வழிகளை நாடினர். இதனால், ஓரளவுக்கேனும் நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

விலை அதிகரிப்பதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட காஸ் சிலிண்டரைப் பயன்படுத்துவோரிடத்தில் எவ்விதமான அச்சமும் சூழ்கொள்ளவில்லை. இது எவ்வளவு நாள்களுக்கு என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது. ஏனெனில், சமையல் எரிவாயு சிலிண்டரை சதாகாலமும் பயன்படுத்த முடியாது.

ஒவ்வொரு குடும்பத்தின் பயன்பாட்டின் பிரகாரம், மாதங்கள் வரையறுக்கப்படும். ஹோட்டல்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு நாளும் கொள்வனவு செய்தே ஆகவேண்டும். இதற்கிடையே, மூன்று நிபந்தனைகளின் பிரகாரம், காஸ் சிலிண்டர்களை விநியோகிக்கும் அனுமதியை நுகர்வோர் அதிகார சபை வழங்கியிருந்தது.

இந்நிலையில், அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (07) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, சமையல் எரிவாயுவை (காஸ்) பயன்படுத்தும் போது, முன்னரை விடவும் கூடுதலான கவனத்தை இன்னும் சில தினங்களுக்கு செலுத்துமாறு அறிவுறுத்தினார்.

சமையல் எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவையடுத்து ஏற்பட்ட தீயில், இரண்டுப் பெண்கள் மரணித்துவிட்டனர். அதிலொன்று தற்கொலை எனவும் மற்றொரு பெண்ணின் உடலில் சீனியின் அளவு குறைந்தமையால் மரணம் ஏற்பட்டுவிட்டதெனக் கதைகளை அவர் புனைந்திருக்கின்றார்.

விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், காஸ் அடுப்புகளை இழந்தவர்களுக்கு நட்டஈட்டை பெற்றுக்கொடுக்க வேண்டியது விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கடப்பாடாகும்.

எனினும், காஸ் விலை அதிகரிக்கப்பட்டால், அந்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோமெனக் கொக்கரிக்கும் அரசாங்கம், பின்னர் வாலைச் சுருட்டிக்கொள்கிறது. இதனூடாக, நுகர்வோரை பாதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு விடயதானத்திலும் இதே முறைதான் கையாளப்படுகின்றது.

விலை அதிகரிக்கும் போது, ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள், மாற்று வழிகளைக் கையாளுவர்.

'பழைய குருடி, கதவைத் திறவடி' என்பதைப் போல, சில நாள்களுக்குள் பழையவற்றுக்குள் திரும்பிவிடுவர். அதுவும் தவிர்க்க முடியாததுதான். ஆனால், மக்களின் உயிர்களுக்கு உலை வைக்கும் வகையிலான செயற்பாடுகளின் போது, முதுகெலும்புடன் தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

காஸ் சிலிண்டர் மீதான அச்சம் களையப்படவில்லை. அதேபோல, அநீதி இழைக்கும் நிறுவனங்களுக்கு எதிராக, அதிரடியான நடவடிக்கையை எடுப்பது, ஒரு படிப்பினையாகவும் முன்மாதிரியாகவும் இருக்கும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அறிவுபூர்வமாக சிந்தனை ஓட்டங்களால் உங்களால் விஸ்தரிக்கப்படும் எண்ணங்கள், இந்தப் பிரபஞ்சங்கள் முழுவதும் பதியப்படுகின்றன. பிரபஞ்சம் மகா பிரமாண்டமானது. இதனால் இந்த எண்ணங்களின் வலுவான சிந்தனைகள், அதேபோல் மேலும்பல பிரபஞ்சங்களின் சிந்தனைக் கற்றைகளுடன் இணைந்து கொள்கின்றன.

நல்ல விடயங்கள் வியாபித்திருக்கும்போது, சக்திமிகு மின்சாரம் போலவும் மின்காந்த அலைகளாகப் பிரபஞ்ச வலுவுடன் பயணிக்கின்றன. இதுவெறும் கற்பனை அல்ல; கற்காத அநேகர் ஞானிகளாக, விற்பன்னர்களாக எங்ஙனம் உருவாகின்றார்கள் என்பதைச் சற்றே சிந்திப்பார்களாக!

மனிதர்களுக்குள் மாபெரும் காந்த சக்தி உண்டு. காதல் எப்படி வையகம் பூராவும் பரவுகின்றது? அன்பின் பரிமாணத்தை அளவிட முடியுமா?

நல்லனவற்றை எவன் தனது ஆன்ம சக்தியுடன் இணைத்து உருப்போடுகின்றானோ, அவன் அதன் வசமாகி விடுகின்றான். மெஞ்ஞானம், விஞ்ஞானம் எல்லாமே சிந்தனையின் வடிவங்கள்தான். இவை சூரியனை ஒத்த பிரகாசமானவை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சியலகொட் சம்பவம்:
# மதம் சார்ந்ததா, தொழில் சார்ந்ததா?



எம்.எஸ்.எம். ஐயூப்

இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளரும் பாகிஸ்தானில் சியல்கொட் நகரில் தொழிற்சாலை ஒன்றின் முகாமையாளருமான பிரியந்த குமார தியவடன என்பவர், வெள்ளிக்கிழமை (03) அவரது தொழிற்சாலை ஊழியர்களாலும் ஏனைய சில பாகிஸ்தானியர்களாலும் தாக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் படுகொலை செய்யப்பட்டமையால், இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் வாழும் முஸ்லிம்கள், பெரும் அசௌகரித்துக்கு உள்ளாகியுள்ளனர்.

"உங்களில் பலர், எங்களில் ஒருவரைக் கொலை செய்துள்ளார்கள்" என்று, இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்கள் இந்தப் பிரச்சினையை அணுகுவதால், அவர்கள் முன்னால், இலங்கை முஸ்லிம்கள் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, சமய வசனங்கள் அடங்கிய சுவரொட்டியை, பிரியந்த குமார கிழித்து எறிந்ததாலேயே அவர் அடித்துக் கொல்லப்பட்டார் என்று ஆரம்பத்தில் வந்த செய்தியின் காரணமாக, இந்தச் சம்பவம் ஒரு சமயம் சார்ந்த விடயமாகப் பலரால் விளங்கிக் கொள்ளப்பட்டது. இது, இலங்கையில் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில், முஸ்லிம் பயங்கரவாதிகள் சிலர், கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து நடத்திய தற்கொலை குண்டுத் தாக்குதல்களை அடுத்து, முஸ்லிம்கள் எதிர்நோக்கிய நிலைமையை ஒத்ததாகும்.

அந்தச் செய்தி பெரும்பாலானவர்கள் மத்தியில் பரவியதன் பின்னரே, வேறு பல விதமான செய்திகள் பாகிஸ்தானிலிருந்து வருகின்றன. அந்தத் தொழிற்சாலைக்கு, ஜேர்மன் வர்த்தக தூதுக்குழுவொன்று விஜயம் செய்ய இருந்ததாகவும் அதனால் பிரியந்தவின் பணிப்பின் பேரில், தொழிற்சாலை சுத்தம் செய்யப்பட்டதாகவும் அப்போது இஸ்லாமிய சமய வசனங்கள் அடங்கிய சுவரொட்டிகளும் நீக்கப்பட்டதாகவும், அதுவே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

அத்தோடு, தொழிற்சாலையில் கடுமையாக ஒழுங்கை, பிரியந்த பேணி வந்ததாகவும் அதனால் பலர் அவருக்கு எதிராக இருந்ததாகவும், தொழிலாளர் போராட்டம் ஒன்றின் போது அவர் வளைந்து கொடுக்காததால், அவர் மீது மத நிந்தனை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, அவர் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அவரது சகோதரரும் ஊடகங்களுக்கு இந்தக் கருத்தையே தெரிவித்தார்.

ஆனால், ஆரம்பத்தில் கிடைத்த தகவல் என்பதாலும் அதையே அவர்கள் விரும்புவதாலும், இலங்கையில் பெரும்பான்மை சமூகத்தில் பெரும்பாலானவர்கள், "இது தொழில் போராட்டம் ஒன்றின் விளைவல்ல; மத நிந்தனையுடன் தொடர்புடையது" என்று நம்பவும் பிரசாரம் செய்யவும் விரும்புகிறார்கள் போலும்!

மத நிந்தனை என்ற விடயம், தற்போது பாகிஸ்தானில் பாரியதொரு பேசுபொருளாக மாறியுள்ளது. அங்கு தடைசெய்யப்பட்டுள்ள தீவிரவாத டி.எல்.பி எனப்படும் 'தெஹ்ரீக் ஈ லப்பை பாகிஸ்தான்' என்ற அமைப்பு, மத நிந்தனைச் சட்டத்தைக் கடுமையாக அமலாக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறது. கடந்த ஒகஸ்ட் மாதம், அயல் நாடான ஆப்கானிஸ்தானில் தாலிபான் அமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்து, டி.எல்.பி அமைப்பு மேலும் ஊக்கமடைந்துள்ளது.

இந்தநிலையில், அண்மையில் அந்த அமைப்பு லாஹோர் நகரில் நடத்திய பாரியதோர் ஆர்ப்பாட்டத்தை அடுத்து, பிரதமர் இம்ரான் கானின் அரசாங்கம், சில விடயங்களில் விட்டுக் கொடுக்க நேரிட்டது. அதன் பிரகாரம், கொலைகள் பலவற்றில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு இருந்த டி.எல்.பி அமைப்பின் சுமார் 350 உறுப்பினர்களையும் அதன் தலைவர் சாத் ரிஸ்வியையும் அரசாங்கம் கடந்த ஒக்டோபர் 25ஆம் திகதி விடுதலை செய்தது. முடக்கப்பட்டு இருந்த அதன் வங்கிக் கணக்கும் விடுவிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில், பிரியந்த மீது சிலர் மத நிந்தனைக் குற்றச்சாட்டை சுமத்தியிருந்த நிலையில், அவரைத் தாக்கிய கொலைகாரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதானது, நிச்சயமாக மிகவும் கடினமான முடிவாகவே இருந்திருக்கும். ஆனால், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அந்த முடிவை எடுத்தார்.

கொலை நடந்த தினமே, "பாகிஸ்தானின் வெட்கத்தின் தினம்" என்று அவர் கூறினார். நூற்றுக்கும் அதிகமான சந்தேக நபர்கள், உடனே கைது செய்யப்பட்டனர். தாம் நேரடியாகவே இந்தச் சட்ட நடவடிக்கையை மேற்பார்வை செய்வதாகவும் இம்ரான் கான் அறிவித்தார். பிரியந்தவை சூழ்ந்து கொண்டு, குண்டர்கள் தாக்கும் போது, அவரைக் காப்பாற்ற முயன்ற மாலிக் அத்னான் என்பவருக்கு, பாகிஸ்தானின் இரண்டாவது உயரிய தேசிய விருதை வழங்குவதாகவும் அறிவித்தார்.

இவ்வாறானதொரு நிலைமையை இலங்கையில் எதிர்பார்க்க முடியாது. 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை அடுத்து, மினுவங்கொடை, குளியாப்பிட்டி போன்ற பகுதிகளில், முஸ்லிம் விரோத கலவரங்கள் இடம்பெற்றன. அப்போது ஒரு முஸ்லிம் நபர், வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு, அடித்துக் கொல்லப்பட்டார். அந்த வீடியோ தற்போது மீண்டும் சமூக ஊடகங்களில் பரவியிருக்கிறது. அந்தச் சம்பவத்துக்காக எவரும் தண்டிக்கப்படவில்லை. இதேபோல், 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் அளுத்கமவில் இடம்பெற்ற கலவரத்தின் போது, நான்கு முஸ்லிம்கள் அதேபோல் கொல்லப்பட்டனர்; எவரும் தண்டிக்கப்படவில்லை.

சியல்கொட் சம்பவத்தை அடுத்து, இலங்கையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளின் போது இடம்பெற்ற பல்வேறு கொடூரச் சம்பவங்களின் படங்களையும் வீடியோக்களையும் தமிழர்களும் முஸ்லிம்களும் சமூக ஊடகங்களில் வெளியிடுகின்றனர்.

1983ஆம் ஆண்டு கலவரத்தின் போது, பொரளை பஸ் நிலையத்தில் ஒரு தமிழர் நிர்வாணமாக்கப்பட்டு கொல்லப்படுவதற்கு முன்னர், பல குண்டர்கள் அவரைச் சுற்றி இருந்து நடனமாடும் ஒரு படம் அவற்றில் முக்கியமாகும். 1958ஆம் ஆண்டு பாணந்துறையில், ஒரு தமிழ் மத குரு உயிரோடு எரிக்கப்பட்ட சம்பவத்தையும் சிலர் நினைவூட்டியிருந்தனர்.

'நீங்களும் இவ்வாறு செய்யவில்லையா' என்று பெரும்பான்மை இனத்தவர்களிடம் கேட்பதே அதன் நோக்கமாக இருப்பின், அது முறையாகாது. ஏனெனில், இரண்டு பிழைகள் சேர்ந்து, சரியான ஒன்று உருவாகாது. அதேவேளை, அது தற்போதைய சம்பவத்தின் கொடூரத்தைக் குறைத்துக் காட்டுவது போலாகும். அதேபோல், தற்போதைய சம்பவத்தை நியாயப்படுத்துவதாகவும் அமையும்.

ஒருவர் கொடுமை செய்தால், அது, மற்றொருவரும் கொடுமை செய்வதற்கான அனுமதிப்பத்திரமாகாது. ஆனால், தற்போதைய சம்பவத்தைப் பாவித்து, கொடூரத்தன்மை ஒரு சமூகத்தினரிடம் மட்டுமே இருக்கிறது என்று, எவராவது வாதிட முற்படுவாரேயானால், அதனை எதிர்கொள்ள மட்டும் அந்தப் பழைய சம்பவங்களைப் பாவிக்கலாம்.

கொடுமை, கொடூரம் என்பவை, ஒரு சமூகத்தின் ஏகபோகம் அல்ல. 1965ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் 10 இலட்சம் வரையிலான மக்கள், ஓரிரு வாரங்களுக்குள் படுகொலை செய்யப்பட்டார்கள். 1994ஆம் ஆண்டு, ருவாண்டாவில் 10 நாள்களுக்குள் 800,000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

சியல்கொட் சம்பவத்தோடு மத நிந்தனை சம்பந்தப்பட்டுள்ளதா என்பது இன்னமும் உறுதியாகவில்லை. ஆனால், பாகிஸ்தானில் அமலில் உள்ள மத நிந்தனைச் சட்டம், இன்று பல மனித உரிமை அமைப்புகளின் விமர்சனத்துக்கு இலக்காகியுள்ளது. உண்மையிலேயே, அது அநீதியாகச் சிலருக்கு எதிராகப் பாவிக்கப்பட்டுள்ளதாக சில வழக்கு விசாரணைகளின் மூலம் தெரிகிறது.

அதேவேளை, உண்மையிலேயே இறை நிந்தனை என்று ஒன்றும் உலகெங்கும் நடைபெற்று வருகிறது. விஞ்ஞான ஆராய்ச்சிகளைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது, இறை சித்தாந்தத்தைப் பலர் மறுக்கின்றனர். ஆனால், அது இறை நிந்தனையாகக் கருதப்படுவதில்லை. எனினும், கருத்துச் சுதந்திரத்துக்குள் மறைந்து, வேண்டும் என்றே சில சமயங்களைப் பின்பற்றுவோரை நிந்திக்கும் நோக்கத்துடனேயே பேசுவோரும் எழுதுவோரும் சித்திரங்களை வரைவோரும், ஏன் அவ்வாறு செய்கிறார்கள் என்று சிந்திக்க வேண்டும். தமது ஆக்கத்தால் கோடிக் கணக்கான மக்களின் மனம் புண்படும் என்பதை அறிந்தே, அவர்கள் அவற்றைப் படைக்கிறார்கள் என்றால் அதன் பின்னால் உள்ள நோக்கம், நல்ல ஒன்றாக இருக்க முடியாது.

அவர்களிடம் அவ்வாறானதோர் எண்ணம் இல்லை என்று வைத்துக் கொண்டாலும், தமது படைப்புகள் மூலம் சமூகத்தில் கருத்து மோதல்கள் உருவாகி, அதன் மூலம் சமாதானம் பாதிக்கப்பட்டு, சிலவேளை உயிர்ச் சேதங்களும் இடம்பெறலாம் என்பதை அவர்கள் உணர வேண்டும் அல்லவா? அந்தப் படைப்பு இல்லாமல் மனிதகுலம் வாழும்; ஆனால், சமாதானம் இல்லாமல் வாழ்வது கடினம்.

மத நிந்தனைச் சட்டங்கள் இருந்தால் அவை மிகவும் கவனமாகக் கையாளப்பட வேண்டும். ஒரு மதத்தைச் சேர்ந்தவர், மற்றைய மதங்களைப் பற்றி அறியாதிருக்கலாம். சில சமயங்களைச் சேர்ந்தவர்கள் தத்தமது சமயத்தையே கேலியாகப் பார்க்கிறார்கள். அவ்வாறானவர்கள், நிந்திக்கும் நோக்கம் இல்லாமலேயே, கேவலமாகப் பேசலாம்.

அதேவேளை, அதிகாரிகளும் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யலாம். இலங்கையில் ஒரு முஸ்லிம் பெண், வண்டிச் சக்கரத்தின் படத்தைப் பொறித்த உடையொன்றை அணிந்திருந்தபோது, அது பௌத்தர்களின் தர்ம சக்கரம் என்று கூறி, பொலிஸார் அப்பெண்ணைக் கைது செய்தனர். பல மாதங்களுக்குப் பின்னரே அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## கடிதங்கள்

### கல்முனையில் கட்டாக்காலிகள்:
### கட்டுப்படுத்த மாநகர சபை அசமந்தம்

கல்முனை மாநகர சபை பிரதேசங்களில் காட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம், இரவு வேளைகளில் மட்டுமன்றி, வாகனப் போக்குவரத்து நெரிசல் நிரம்பிய அவசர நேரங்களிலும் உள்ளதன் காரணமாக, போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதுடன் விபத்து சம்பவங்களும் இடம்பெறும் அபாயம் நிலவிவருகிறது.

2021 அக்டோபர் ஆறாம் திகதி வெளியிடப்பட்ட அறிவித்தலில் பிரகாரம், கட்டாக்காலி ஆடு, மாடு ஆகியவற்றின் தொல்லைகள் அதிகரித்திருப்பதால், அவற்றைக் கைப்பற்றி, உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 07-10-2021 தொடக்கம் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வாறு கைப்பற்றப்படும் ஒவ்வோர் ஆடு, மாடு ஆகியவற்றுக்கு நாள் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வீதம் தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது எனத் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனாலும், இன்றுவரை இந்தச் செயற்பாடு அமல்படுத்தப்படாத காரணத்தால், கட்டாக்காலி மாடுகள் கல்முனை நகர வீதிகளில் அலைந்துதிரிகின்றன. இதனால், போக்குவரத்து நெரிசல் நிரம்பிய கல்முனை மாநகரில், பல்வேறு அசௌகரியங்களை வீதியில் பயணிப்போர் எதிர்நோக்குகின்றனர். எனவே, மேற்குறிப்பிட்ட அறிவித்தலை உடனடியாக அமல்படுத்தி, நடவடிக்கை எடுக்குமாறு, கல்முனை மாநகர சபை நிர்வாகத்தை பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

-நூருள் ஹுதா உமர்



புதுடெல்லி

### இந்திய–ரஷ்ய நட்பு நிலையானது

# புட்டினிடம் மோடி வலியுறுத்து

கடந்த சில தசாப்தங்களில், உலகம் பல அடிப்படை மாற்றங்களைக் கண்டது. பல்வேறு வகையான புவிசார் அரசியல் சமன்பாடுகள் தோன்றின. ஆனால் இந்தியா மற்றும் ரஷ்யாவின் நட்பு நிலையானது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடனான சந்திப்பின்போது பிரதமர் மோடி கூறினார்.



உச்சிமாநாட்டிற்கு முன்னதாக ரஷ்ய தூதர் அமைதியான மற்றும் வலிமையான கூட்டாண்மை என்று பாராட்டினார்.

இந்திய-ரஷ்ய உச்சி மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடி தனது தொடக்க உரையில், இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான உறவு, மாநிலங்களுக்கு இடையேயான நட்புறவின் தனித்துவமான மற்றும் நம்பகமான மாதிரியாகும். நமது உறவுகள் தொடர்ந்து வலுப்பெற்று வருகின்றன.

நமது இரு நாடுகளும் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. நாங்கள் ஒத்துழைப்பது மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் புரிந்துணர்வையும் மனதில் வைத்துள்ளோம் என்றும் பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

இரு தலைவர்களும் திங்கட்கிழமை (06) இந்திய-ரஷ்ய உச்சி மாநாட்டை நடத்தினர். பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை புதுடில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்தார். பிரதமர் மோடி, தனது தொடக்க உரையில், கொவிட் -19 தொற்றுநோய் பரவலின்போது கூட, இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

இரு தரப்புக்கும் இடையிலான சிறப்பு மற்றும் சலுகை பெற்ற மூலோபாய கூட்டாண்மை வலுவடைந்து வருவதாகவும், ஆப்கானிஸ்தானின் நிலைமை மற்றும் பிற பிரச்சினைகள் குறித்து இரு தரப்பும் தொடர்பில் இருப்பதாகவும் கூறினார்.

சென்னை

### தி.மு.க அரசாங்கத்தைக் கண்டித்து

# அ.தி.மு.க நாளை போராட்டம்

மக்கள் நலன் காக்கும் பல்வேறு பணிகளைச் செய்யத் தவறி வரும் திராவிட முன்னேற்ற கழக (தி.மு.க) அரசாங்கத்தைக் கண்டித்தும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் துயரங்களுக்குத் தீர்வு காண வலியுறுத்தியும், அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க) சார்பில் நாளை (09) மாநில அளவில் போராட்டம் நடத்த இருப்பதாக அ.தி.மு.க தெரிவித்துள்ளது.



இது தொடர்பாக, அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தி.மு.க ஆட்சியைப் பொறுப்பேற்று பல மாதங்களுக்கு மேல் கடந்த போதிலும், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலோ, மக்களின் அன்றாடத் தேவைகளையும், அவர்கள் சந்திக்கும் ஏராளமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலோ மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசாங்கம் சிறிதும் அக்கறை கொள்ளாமல் வாய்ச் சவடால் ஆட்சி நடத்துவதை அ.தி.மு.க வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த அலட்சியப் போக்கை எதிர்த்துப் போராட அ.தி.மு.கவின் முழு ஆற்றலையும் பயன்படுத்துவோம் என்று அறிக்கை மூலம் எச்சரித்துள்ளது.

தமிழகம்

# பா.ஜ.க வளர்கிறது; சரிகிறது காங்கிரஸ்

மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் இரண்டரை ஆண்டுகள் உள்ள நிலையில் அதற்குள் தேசிய அரசியல் அரங்கம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது.



தொடர்ந்து இருமுறை ஆட்சியில் உள்ள பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) மீண்டும் ஆட்சியை தக்கவைக்க பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பா.ஜ.க ஆட்சிக்கு வந்ததிலிருந்து நாடு முழுவதும் சில மாநிலங்களில் ஆட்சியைப் பிடித்துள்ளது. பா.ஜ.கவை எதிர்க்கும் வலுவோடு காங்கிரஸ் கட்சி தற்போது நிச்சயமாக இல்லை என்பதே அரசியல் விமர்சகர்களின் கருத்தாக உள்ளது. பா.ஜ.க வளர்ச்சியடையும் நிலையிலும் காங்கிரஸ் மேலும் சரிவடையும் நிலையிலும் இருப்பதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

காங்கிரஸ் கட்சிக்கு தலைவர் பதவியை ஏற்று வழிநடத்தக்கூட ராகுல் காந்தி தயாராக இல்லாத போது, அவரை எப்படி மோடிக்கு மாற்றாக ஒப்பீடு செய்ய முடியும் என்ற பேச்சு நிலவுகிறது.

லக்னோ

# மாயாவதி குற்றச்சாட்டு

ஊடகங்களை தமக்கு தேவையான விதத்தில் எவ்வாறு நிர்வகிப்பது என்பது உத்தரப்பிரதேச பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) அரசுக்குத் தெரியும் என்று பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி கடுமையாகச் சாடினார்.



ஆளும் மத்திய, மாநில அரசுகளின் அக்கறையின்மையால் மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் சொன்னார்.

நாடு முழுவதும் அம்பேத்கர் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டு வரும் நிலையில் அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு உத்தரப்பிரதேசத் தலைநகர் லக்னோவில் பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், மாநிலத்தில் நலிந்த பிரிவினருக்கு எதிராக வன்கொடுமைகள் நாள்தோறும் நடக்கின்றன.

இதுபோன்ற சம்பவங்கள் குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாவதில்லை. நலிந்த மக்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளை வெளியிடாமல் ஊடகங்களை எவ்வாறு நிர்வகிப்பது என்பது உத்தரப்பிரதேச பா.ஜ.க அரசாங்கத்துக்கத் தெரியும். மத்திய, மாநில அரசுகள் சாதிய மனப்பான்மையோடு இயங்குவதால்தான் நலிந்த மக்களுக்காக அரசியல் சாசனத்தில் வகுக்கப்பட்ட சலுகைகளை அவர்கள் பெற முடியாத நிலை உள்ளது என்றும் குற்றம் சாட்டினார்.

தலித், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மற்றும் புறக்கணிக்கப்பட்டோரின் மேம்பாட்டுக்காக அம்பேத்கர் பாடுபட்டார் என்று புகழாரம் சூடிய மாயாவதி, அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை மக்கள் பெற முடியவில்லை. அதற்குக் காரணம் ஆளும் மத்திய, மாநில அரசுகளின் அக்கறையின்மைதான் என்றும் கடுமையாக சாடினார்.

ஆந்திரா

# மாணவிகளிடம் சில்மிஷம்; பெண்கள் தர்ம அடி

சமூக சேவகர்போல் நடித்து மாணவிகளிடம் சில்மிஷம் செய்த நபரை பெண்கள் வீதிக்கு இழுத்துவந்து தர்ம அடிகொடுத்த சம்பவம் ஆந்திர மாநிலத்தில் நடைபெற்றுள்ளது.

ஆந்திர மாநிலம், விசாகபட்டினத்தைச் சேர்ந்தவர் தோமன் சின்னா ராவ். பொலிஸ் ரவுடிகள் பட்டியலில் இடம் பிடித்துள்ள இவர், தன்னை நல்லவனாகக் காண்பித்து தொண்டு அமைப்பு ஒன்றை ஆரம்பித்து, சமூக சேவையில் ஈடுபடுவது போல் நடித்து வந்துள்ளார்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் அங்கு உள்ள பள்ளிக்குச் சென்ற தோமன் சின்னாராவ், தலைமை ஆசிரியரிடம் பேசி பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு பென்சில், ரப்பர் ஆகியவற்றை கொடுத்துள்ளார்.

பின்னர் மீதி இருந்த பென்சில், ரப்பர் ஆகிவற்றை வீட்டுக்கு எடுத்துச் சென்ற அவர், சில மாணவிகளிடம் வீட்டுக்கு வந்தால் பென்சில், பேனா, ரப்பர் கொடுக்கிறேன் என்று கூறி அவர்களை மாலை வேளையில் வீட்டுக்கு வரவழைத்துள்ளார்.

பென்சில், பேனா, ரப்பர் கிடைக்கும் என்ற ஆசையில் அவருடைய வீட்டுக்கு வந்த மாணவிகளிடம் அவர் பாலியல் சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளார். இதுபற்றி மாணவிகள் வீட்டுக்கு சென்று பெற்றோரிடம் தெரிவித்தனர்.

ஆவேசமடைந்த பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார், சின்னாராவ் வீட்டுக்குச் சென்று அவரை தெருவுக்கு இழுத்து வந்து கடுமையாக தாக்கினர்.

புதுச்சேரி

# நரிக்குறவர் அன்பைப் பெற்ற தமிழிசை அக்கா

நரிக்குறவர் இன மக்கள் வைத்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி, அவர்களின் அன்புக்குப் பாத்திரமானார் ஆளுநர் தமிழிசை.



புதுச்சேரி, வில்லியனுர் பகுதியில் வசிக்கும் நரிக்குறவ சமூக மக்கள், தமக்கு பல வாழ்விட வசதிகளைக் கேட்டு கோரிக்கை விடுத்ததை அடுத்து, ஆளுநர் தமிழிசை சவுந்தராஜன், அவர்களுக்கு அவற்றை செய்துகொடுப்பதற்கான நடவடிக்கைய்யை உடனடியாக எடுக்க உத்தரவிட்டார்.

இப்பகுதியின் ஒதியம்பட்டு என்னுமிடத்தில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நரிக்குறவர் இன மக்களுக்கு, புதுச்சேரி செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக வெள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில், துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்து கொண்டு நிவாரண பொருட்களை வழங்கினார். அப்போது நரிக்குறவர் இன மக்களின் வீடுகளையும் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளையும் அவர் பார்வையிட்டு, அப்பகுதி மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதோடு, அங்கிருந்த குழந்தைகளுக்கு படிப்புக்கான பொருட்களை வழங்கி, குழந்தைகளுடன் பேசி மகிழ்ந்தார். நிகழ்ச்சிக்கு பிறகு ஆளுநர் தமிழிசை செய்தியாளர்களிடம் பேசியதாவது:

“வில்லியனூர், ஒதியம்பட்டு பகுதியில் நரிக்குறவர் சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகளுக்கு உதவிகள் வழங்கியிருக்கிறோம். அவர்களுடைய வீடுகளைப் பார்வையிட்டேன்; பாழடைந்து, இடிந்துபோன நிலையில் இருக்கின்றன.

நரிக்குறவப் பெண்கள் கழிப்பறை வசதி வேண்டும் எனக் கேட்டிருக்கிறார்கள். நிரந்தரமான கழிப்பறைகள் கட்டுவதற்கு முன்பாக, ஒரு நடமாடும் கழிப்பறையை உடனடியாக நிறுத்தும்படி சுகாதாரத்துறை மற்றும் செஞ்சிலுவை சங்க அதிகாரிகளிடம் கூறியிருக்கிறேன். முதலமைச்சருடன் ஆலோசனை நடத்தி அதற்கான முடிவு எடுக்கப்படும். இந்த மக்களுக்கு உறுதுணையாக இருப்போம்” என்றும் ஆளுநர் கூறினார்.

# அமைச்சரவை தீர்மானங்கள்




### 1. இலங்கை அடையாளத்துடன் கூடிய பிறப்புச் சான்றிதழ்:

தேசிய ஆட்கள் பெயர்ப்பட்டியலை பேணுதல் மற்றும் 15 வயதை அடைந்தவர்கள், 15 வயதை அடையவுள்ள இலங்கைப் பிரஜைகளின் விண்ணப்பத்திற்கமைய அவர்களைப் பதிவு செய்து தேசிய அடையாள அட்டையை வழங்குதல், ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் (இலங்கை அடையாள இலக்க) கட்டளையின் பிரகாரம் அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் இலங்கை அடையாள இலக்கத்தை வழங்குவதற்காகவும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒரே அடையாள இலக்கத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் போது குறித்த நடவடிக்கைகளை இலகுவாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு இலங்கையர்களுக்கு வருங்காலங்களில் வாய்ப்புக் கிடைக்கும்.

அதற்கமைய, ஆட்பதிவுத் திணைக்களத்தின் தகவல் தொகுதி மூலம் இணையவழியூடான இலங்கை அடையாள இலக்கத்தை பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு வெளியிடுவதற்கும், குறித்த இலக்கத்தை உள்ளடக்கி பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் மூலம் குறித்த நபர்களின் பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 02. ஆய்வுக்கான ஒதுக்கீட்டு வழங்கல்:

50 இற்கு மேற்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளில் 500 இற்கும் அதிகமான அங்கத்துவ நிறுவனங்களுடன் கூடியதாக, பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பல்கலைக்கழக சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது 1913 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொதுநலவாய அமைப்புக்கு சொந்தமானதும் அதற்கு வெளியேயும் வசிக்கின்ற நபர்கள் மற்றும் சமூகங்களின் ஆரோக்கியத்திற்காக உயர்கல்வித் தேர்ச்சியை மேம்படுத்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்கல் இச் சங்கத்தின் பணிக்கூற்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

‘ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சமூகத்தவர்களிடையே பால்நிலை தொடர்பாகத் தெளிவூட்டல்’ எனும் தலைப்பில் குறித்த பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்ட யோசனையை கருத்தில் கொண்டு, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 1,000 பிரித்தானிய பவுண்கள் ஆய்வுக்காக ஒதுக்கி வழங்குவதற்கும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பல்கலைக்கழக சங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, குறித்த ஒதுக்கீட்டு வழங்கலை பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பல்கலைக்கழக சங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 03. காணிகளை குத்தகைக்கு வழங்கல்:

கொவிட் -19 தொற்று நிலைமையில் உணவு இறக்குமதிக்காக அந்நிய செலாவணி வெளிநாடுகளுக்கு இழுத்துச் செல்லப்படுவதால் எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் எதிர்மறை விளைவுகளைக் குறைக்கும் நோக்கில் உள்ளூரில் பயிரிடக்கூடிய அத்தியாவசிய உணவுப்பயிர்களைப் பயிரிடுவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல், உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், கால்நடைத் தீவனங்களை உள்ளூரில் உற்பத்தி செய்யும் தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு, கொள்கைப் பிரகடனத்தின் நோக்கமாக உள்ளது.

அதற்கமைய, தேசிய போசாக்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட வணிக விவசாயக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, மகாவலி பிரதேசங்களில் அமைந்துள்ள 1,750 ஹெக்டேயர் காணிகளை முறையான பொறிமுறையைக் கையாண்டு, தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கு நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 04. இயலளவு விருத்திக் கருத்திட்டம்:

இலங்கை குற்ற நீதிச் செயன்முறையில் தடயவியல் போதைப்பொருள் பகுப்பாய்வு தொடர்பான இயலளவு விருத்திக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக கொரியா சர்வதேச ஒத்துழைப்புப் பிரதிநிதி நிறுவனம், 04 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தின் கீழ் போதைப்பொருள் மற்றும் நீதிமன்ற போதைப்பொருள் விஞ்ஞான இரசாயன ஆய்வுகூடத்தின் ஆராய்ச்சி உபகரணங்களை மேம்படுத்தல், போதைப்பொருள் மற்றும் நீதிமன்ற போதைப்பொருள் விஞ்ஞானம் தொடர்பான பயிற்சி வழங்கல் மற்றும் ஆய்வுகூடத் தகவல் முகாமைத்துவத் தொகுதியை நிறுவுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த ஒதுக்கீட்டு வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்காக கொரியா சர்வதேச ஒத்துழைப்புப் பிரதிநிதி நிறுவனம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் மற்றும் நீதி அமைச்சுக்கும் இடையில் ஆய்வு வரையறைகள் உள்ளடங்கும் அந்த ‘கலந்துரையாடல் அறிக்கையில்’ கையொப்பமிடுவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 05. அம்பாறையில் இதயநோய் பிரிவு:

அம்பாறை மாவட்டத்தில் இதயநோய்களுக்கு ஆளாகுபவர்கள் மற்றும் இதயநோயால் இறக்கின்றவர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் படிப்படியாக அதிகரித்துள்ளது.

இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, சிகிச்சை பெறுவதற்கு சமூகமளிக்கும் இதய நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சை சேவைகளை வழங்குவததற்காக அம்பாறை பொது மருத்துவமனையின் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேவை காணப்படுகின்றது.

அதற்கமைய, அம்பாறை பொது மருத்துவமனையின் நீர்மமேற்று ஆய்வுகூடத்துடன் கூடிய இதயநோய் பிரிவொன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தை தயாரித்து, நிர்மாணித்து, ஒப்படைத்தல் எனும் அடிப்படையில் பொறியியல் பணிகள் தொடரபான மத்திய ஆலோசனைப் பணியகத்துக்கு வழங்குவதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சிரியா

# துறைமுகத்தின் மீது இஸ்ரேல் தாக்குதல்



சிரியத் துறைமுகமான லடாக்கியா மீது இஸ்ரேலியத் தாக்குதல் ஜெட்கள் ஏவுகணைகளை ஏவியதாகவும், உயிர்ச்சேதம் இல்லாமல் கொள்கலன்களைச் சேதமாக்கியதாக சிரிய இராணுவம் தெரிவித்துள்ளது.


இத்தாக்குதலானது இலங்கை நேரப்படி நேற்று (07) காலை 5.53க்கு இடம்பெற்றதாக இராணுவத் தகவல் மூலம் ஒன்று தெரிவித்ததாக சனா செய்தி முகவரகம் செய்தி வெளியிட்டுள்ளது.

துறைமுகத்திலுள்ள கொள்கலன் பகுதியை சில ஏவுகணைகள் தாக்கியதாகவும், இதனால் சில கொள்கலன்கள் தீப்பற்றி எரிந்ததாக குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

> **“ துறைமுகத்திலுள்ள கொள்கலன் பகுதியை சில ஏவுகணைகள் தாக்கின. இதனால் சில கொள்கலன்கள் தீப்பற்றி எரிந்தன. லடாக்கியாவில் இஸ்ரேலின் ஆக்ரோஷத்தை தமது வான் பாதுகாப்புத் தடுப்புக் கட்டமைப்புகள் முறியடித்ததாக சிரியாவின் அதிகாரி கூறியுள்ளார்**

லடாக்கியாவில் இஸ்ரேலின் ஆக்ரோஷத்தை தமது வான் பாதுகாப்புத் தடுப்புக் கட்டமைப்புகள் முறியடித்ததாக இவ்வதிகாரி கூறியுள்ளார்.

இந்நிலையில், துறைமுகத்தில் ஐந்து வெடிப்புகளைக் கேட்கக் கூடியதாக இருந்ததாகவும், கொள்கலன் பகுதியில் பாரிய தீ ஏற்பட்டதாக சிரிய அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.



சீனா

# சந்திரனில் மர்மப் பொருள்

புவிக்கு நிரந்தரமாகத் தென்படாத சந்திரனின் பகுதியிலுள்ள ஒரேயொரு விண்கலமானது, மர்மப் பொருள் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது.

சீன விண்கலமான ‘யூட்டு- 2’ என்ற விண்கலமே இவ்வாறு மர்மப் பொருளைக் கண்டுள்ளது.

இந்நிலையில், குறித்த பொருளானது பெரும்பாலும் சந்திரக் கல்லாக இருக்கும் என்றபோதிலும் எதையும் மறுப்பதற்கில்லை.

அந்தவகையில், குறித்த பொருளை நோக்கி விண்கலம் நகர்ந்து வருகின்ற நிலையில், அப்பொருளிலிருந்து 260 அடி தூரத்தில் விண்கலம் உள்ள நிலையில், அப்பொருளை நெருங்க இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தேவை எனக் கூறப்படுகிறது.



மியான்மார்

# சூ கியின் தண்டனை காலம் குறைப்பு

மியான்மாரின் முன்னாள் தலைவர் ஆங் சான் சூ கிக்கு ஆரம்பத்தில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த நிலையில், அந்நாட்டின் இராணுவத் தலைவர் மின் ஆங் ஹிலைங்கின் பகுதியளவு பொதுமன்னிப்பை அடுத்து தண்டனைக் காலம் குறைக்கப்பட்டதாக அந்நாட்டு அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, மியான்மார் ஜனாதிபதி வின் மைண்டின் நான்கு ஆண்டு சிறைத்தண்டனைக் காலமும் பின்னர் இரண்டு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இருவரும் சிறைச்சாலைக்கு அனுப்பப்படமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஐ. அமெரிக்கா

# முதலாளியால் ஸூமில் 900 பணியாளர் நீக்கம்

எவ்வித முன்னறிவித்தல் இன்றியும், விடுமுறைகளுக்கு சற்று முன்னரும் ஸூம் செயலமர்வு ஒன்றுக்கு சமூகமளிக்காத 900 பணியாளரை ஐக்கிய அமெரிக்க நிறுவனம் ஒன்று நீக்கியுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்செயலமர்வின்போது, “நீங்கள் இந்த அழைப்பில் இல்லாவிட்டால், நீக்கப்படும் அதிர்ஷ்டமில்லாத குழுவில் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களது பணி உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றது” என இந்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்நிறுவனத்தின் பணியாட்படையின் ஒன்பது சதவீதமானோர் நீக்கப்பட்டுள்ளனர்.

பிரித்தானியா

# கலப்புக்கு நோயெதிர்ப்பு அதிகம்

முதலில் அஸ்ரனெக்கா அல்லது பைஸரைப் பெற்று ஒன்பது வாரங்களின் பின்னர் மொடெர்னாவைப் பெறுபவர்களின் நோயெதிர்ப்புக் கட்டமைப்புத் தொழிற்பாடானது



மேம்பட்டதாகக் காணப்படுவதாக பிரித்தானியா ஆராய்ச்சியொன்றின் நேற்று முன்தினம் (06) வெளியிடப்பட்ட முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இரண்டு அஸ்ரஸெனக்கா தடுப்பூசிகளை விட மூன்று மடங்குக்கும் அதிகமான பதிலளிப்பு கிடைப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

எல்.பி.எல்:

# ஜையன்ட்ஸை வென்ற கிங்ஸ்



லங்கா பிரீமியர் லீக்கில் (எல்.பி.எல்), கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற தம்புள்ள ஜையன்ட்ஸுக்கு எதிரான போட்டியில் ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஜையன்ட்ஸின் அணித்தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஜையன்ட்ஸ், ஆரம்பத்திலேயே நிரோஷன் டிக்வெல்ல, லஹிரு உதார, பில் சோல்டை சுரங்க லக்மால், மகேஷ் தீக்ஷனவிடம் பறிகொடுத்தது.

குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் ஷானக, நஜிபுல்லா ஸட்ரானை தீக்ஷனவின் ஒரே ஓவரில் பறிகொடுத்த ஜையன்ட்ஸ், சிறிது நேரத்தின் பின்னர் நுவனிடு பெர்ணான்டோவை ஜேடன் சியல்ஸிடம் இழந்தது.

தொடர்ந்து சாமிக கருணாரத்ன, ரமேஷ் மெண்டிஸ், மேர்ச்சன்ட் டி லஞ்ச் ஆகியோரை குறிப்பிட்ட இடைவெளிகளில் வனிடு ஹஸரங்கவிடம் இழந்த ஜையன்ட்ஸ், 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 110 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில், ஹஸரங்க 4-0-16-3, தீக்ஷன 4-1-22-3, சியல்ஸ் 3.3-1-23-2, லக்மால் 4-0-28-2, சத்துரங்க டி சில்வா 4-0-17-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 111 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிங்ஸ், ஆரம்பத்திலேயே ரஹ்மனுல்லாஹ் குர்பாஸை இம்ரான் தாஹீரிடம் இழந்தபோதும், அவிஷ்க பெர்ணான்டோவின் 33 (27), டொம் கொஹ்லர்-கட்மோரின் ஆட்டமிழக்காத 45 (30), ஷொய்ப் மலிக்கின் ஆட்டமிழக்காத 26 (10) ஓட்டங்களோடு 12.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், தாஹீர், 4-0-20-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக தீக்ஷன தெரிவானார்.

இந்நிலையில், நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கோல் கிளாடியேட்டர்ஸுடனான போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் வென்றிருந்தது.

இதேவேளை, இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸும், தம்புள்ள ஜையன்ட்ஸும் மோதவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஜஃப்னா கிங்ஸும், கண்டி வொரியர்ஸும் மோதவுள்ளன.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# ஆர்சனலை வென்றது எவெர்ற்றன்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், எவெர்ற்றனின் மைதானத்தில் நேற்று (07) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் தோற்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்டின் ஒடேகார்ட் பெற்றதுடன், எவெர்ற்றன் சார்பாக, றிஷலிஷன், டெமராய் கிறே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான

# தென்னாபிரிக்க குழாமில் ஒலிவியர்

இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்கக் குழாமில் வேகப்பந்துவீச்சாளர் டுவன்னே ஒலிவியர் இடம்பெற்றுள்ளார். இறுதியாக கடந்த 2019ஆம் ஆண்டே தென்னாபிரிக்காவுக்காக டெஸ்ட் போட்டியில் ஒலிவியர் விளையாடியிருந்தார்.

இதேவேளை, றயான் றிகெல்டன், சிஸன்டா மகலா ஆகியோர் முதற்தடவையாக டெஸ்ட் குழாமில் இடம்பெற்றுள்ளதோடு, கிளென்டன் ஸ்டுர்மன், பிரெனெலான் சுப்ராயன் ஆகியோரும் குழாமில் இடம்பெற்றுள்ளனர். குழாம்: டீன் எல்கர் (அணித்தலைவர், தெம்பா பவுமா (உப அணித்தலைவர்), குயின்டன் டி கொக் (விக்கெட் காப்பாளர்), ககிஸோ றபாடா, சரெல் எர்வீ, பெயுரன் ஹென்ட்றிக்ஸ், ஜோர்ஜ் லின்டி, கேஷவ் மஹராஜ், லுங்கி என்கிடி, ஏய்டன் மார்க்ரம், வியான் முல்டர், அன்றிச் நொர்ட்ஜே, கீகன் பீற்றர்சன், றஸி வான் டர் டுஸன், கைல் வெரைன், மார்கோ ஜன்சென், கிளென்டன் ஸ்டுர்மன், பிரெனெலான் சுப்ராயன், சிஸன்டா மகலா, றயான் றிகெல்டன், டுவன்னே ஒலிவியர்.



பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் பாகிஸ்தான்

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் முன்னிலையில் பாகிஸ்தான் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், டாக்காவில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த மழையால் இரண்டரை நாள்கள் அளவில் இழக்கப்பட்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், அணித்தலைவர் பாபர் அஸாமின் 76, அஸார் அலியின் 56, மொஹமட் றிஸ்வானின் ஆட்டமிழக்காத 53, பவாட் அலாமின் ஆட்டமிழக்காத 50, அபிட் அலியின் 39, அப்துல்லா ஷஃபிக்கின் 25 ஓட்டங்களோடு 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 300 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. பந்துவீச்சில், தஜியுல் இஸ்லாம் 2, எபொடொட் ஹொஸைன் 1, காலிட் அஹ்மட் 1 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் பங்களாதேஷ், சஜிட் கானிடம் 6 விக்கெட்டுகளை வரிசையாகப் பறிகொடுத்து நேற்றைய நான்காம் நாள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 76 ஓட்டங்களையே பெற்றுத் தடுமாறி வருகிறது. களத்தில், ஷகிப் அல் ஹஸன் 23, தஜியுல் இஸ்லாம் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்காமல் உள்ளனர். நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

# நியூசிலாந்து தொடரைத் தவறவிடும் ஷகிப்

நியூசிலாந்துச் சுற்றுப்பயணத்தைத் தவற விடுவதற்கான பங்களாதேஷின் முன்னாள் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸனின் கோரிக்கையை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்றுக் கொண்டுள்ளதாக சபையின் தலைவர் நஸ்முல் ஹஸன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

சில நாள்களுக்கு முன்னதாக, சுற்றுப்பயணம் மேற்கொள்ள விரும்பாததை தங்களுக்கு உத்தியோகபற்றற்ற முறையில் மாத்திரமே ஷகில் அல் ஹஸன் அறிவித்ததாக நஸ்முல் ஹஸன் தெரிவித்திருந்தார்.

பின்னர் கடிதமொன்றை உத்தியோகபூர்வமாகக் கையளித்து ஷகிப் அல் ஹஸன் வினவியதாகக் கூறப்படுகிறது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 08 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.